

# தூய ஆவியில் பயணம்

2010 கார்த்திகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

கார்த்திகை மாதம் 2010

## "உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவுமில்லை"

ISSN 1391 - 5975

வெளியிடுபவர்
சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார்
கிது தன புபுதுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபத்திற்கு கைகொடுத்தல்

## கார்த்திகை மாதம்

பரிசுத்த யோவான் 21:15ஆம் 17ஆம் வசனத்தை தியானத்தில் வாசிக்கின்ற போது கேள்விகள் ஏற்படலாம். அவ்வசனத்தைக் கவனத்தில் கொள்கையில், **ஆண்டவருக்கு அன்பு செய்கின்றாயா?** எனும் கேள்விக்கு, பேதுருவானவர் அளித்த பதிலினை விட என் பதிலில் மாற்றம் காணப்படுகின்றதா? எப்படியாயினும் அமைதியினுள் தியானமிகு பதில் எழக்கூடும். **"நான் உண்மையாகவே ஆண்டவருக்கு அன்பு செய்கின்றேனா?"** என் தனிப்பட்ட வாழ்க்கையினுள், சங்கம வாழ்க்கையினுள், சமுதாயப் பிரச்சனைகளுக்கு நடுநிலை வகிக்கையில், எமது பிரதிபதில் என்ன? சிலுவையடி வார அனுபவம் இதற்கு உறுதியான பதிலினை அளிக்கின்றது. இந்த அனுபவத்தினுள் வாழ்கையில் நான் / நாம் எவ்விதத்தில் பதில் அளிக்க வேண்டும்.

அருட் திரு. ஒஸ்கா அபயரத்ன அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
01 திங்கள்

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
7:2-4, 9-14

பதிலுரைப்பாடல்
தி.பா 24 :1-6

இரண்டாம்வெளிப்பாடு
1 யோவான்
3:1-3

நற்செய்திவெளிப்பாடு
புனித மத்தேயு
18:1-5
சகல புனிதர்கள்
பெருவிழா

## நற்செய்தியிலிருந்து

இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர்கள் அவரருகே வந்தனர். அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை: ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. துயருறுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர்;....... என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து துன்புறுத்தி ..... நீங்கள் பேறுபெற்றவர்களே!....

## ஒளியின் விழிப்பு

பேறு பெற்ற மக்கள் யார் என்பதை இயேசு நாதர் தெளிவாக வெளிப்படுத்து கின்றார். உவமை மூலமாக அதிகம் போதித்து மக்கள் மனதைக் கவர்ந்த இயேசு நாதரின் போதனை, இன்று வேறு விதத்தில் ஒலிக்கின்றது. மனித வாழ்வு ஒரு நோக்கைக் கொண்டதாக இருக்க வேண்டும். அதாவது, இறை விருப்பம் என்ன என்பதைத் தேடும் வாழ்வாக இருக்க வேண்டும். மனிதன் சுதந்திரமாக வாழ்ந்தாலும் அவர் மற்றவர் மட்டில் அன்பு காட்ட வேண்டும். ஏழைகள் கைவிடப்பட்டவர்கள், நோயாளிகள் அகதிகள் அனாதைகள் ஒடுக்கப்பட்டவர்கள் மட்டில் இரக்கம் காட்ட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். கடவுள் அன்பார்ந்தவர்; இரக்கம் நிறைந்தவர். அவர் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் வாழ்வில் அவ் அன்பு ஒளிர வேண்டும். "வாழ்வில் முதலிடம் இறை அரசிற்கே" என்ற கருத்துடன் வாழும் பொழுது இறைவனின் திருவுளம் நிறைவேற்றப்படுகின்றது. வாழ்க்கை அன்பின் வாழ்வாக அமைகின்றது. இன்றைய நற்செய்திக்கு ஏற்ப வாழ்வை அமைத்துக் கொள்ள எமக்கு அழைப்புக் கிடைக்கின்றது.

## எம் பேரில்

சகல புனிதர்களுக்கும் விழாவெடுக்கும் இன்றைய நாளில், புனிதர்கள் இறை விருப்பத்தினை நிறைவேற்றி உன்னத நிலையை அடைந்த மக்கள் என்பதைத் தியானிக்கின்றோம். இவர்கள் இயேசுவின் போதனைகளில் வாழ்ந்தது மட்டுமல்லாமல், மற்றவர்களும் நல்வழியில் வாழ உதவி புரிந்தவர்கள் என்பதைக் காணலாம்.

எனது மனநிலையைச் உற்று நோக்கினேன். அன்பும் இரக்கமும் என் வாழ்வில் உள்ளதா? எனது பதவி, செல்வம் கௌரவம் பெருமை, இறை விருப்பபடி வாழ, எனக்குத் தடையாகி இருப்பதை உணர்ந்தேன். பேறுபெற்ற தாயாரில் நிறைந்து இருக்கும் இப்பொழிவுகளை நாம் சற்று தியானிப்போம். அப்பேறுபெறினைப் பெற்றுக் கொள்ள தாயாரிடம் செல்வோம். எமது ஒவ்வொரு செயலிலும் இறை விருப்பம் நிறைவேற்றுகின்றதா என்பதில் விழிப்புற்று செயல்படுவோம்.

## செபம்

அன்பின் இறைவா! உம் நாமத்தின் பெயரால் வாழ்க்கையில் புறக்கணிப்பிற்கு உள்ளாகும் போது, உலக பெருமதிகளை வெறுத்து உமது வார்த்தையில் வாழ வரம் தாரும் ஆமென்.

ஆண்டவரது மலையில் ஏறத் தகுதியுள்ளவர் யார்? அவரது திருத்தலத்தில் நிற்கக்கூடியவர் யார்? (தி.பா 24: 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

கார்த்திகை
02 செவ்வாய்

முதலாம்வெளிப்பாடு
எசாயா
25 :6-9

பதிலுரைப்பாடல்
திபா 23: 1-6

இரண்டாம்வெளிப்பாடு
ரோமர்
5:5-11

நற்செய்திவெளிப்பாடு
புனித யோவான்
6: 37 - 40

இறந்தவிசுவாசிகள்
அனைவரின்
நினைவு

**பரி.நற்செய்தியிலிருந்து**

தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் என்னிடம் வந்து சேருவர். என்னிடம் வருவவரை நான் புறம்பே தள்ளி விட மாட் - டேன். ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறை- வேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப் பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்தேன். அவர் என்னிடம் ஒப்படைக் கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம்...

**ஒளியின் விழிப்புறுதல்**

வாரும் படைப்பாள- ராம் தூய ஆவியானவரே! ஒவ்வொரு உள்ளங்களையும் சந்திக்கின்ற ஆண்டவரே, இயேசு மகனின் உள்ளத்தினை எனக்கு காண்பித்தருளும்.

தான் உண்டாக்கி உருவாக்கிய அன்பு மக்கள் அழிவுறுவதை இறைவன் ஒருபோதும் விரும்பவில்லை. நினிவே நகரத்து மக்களைக் காப்பாற்றிய அவர் தான் படைத்த மனிதனை அழிக்க மாட்டேன் என்று உறுதியாகக் கூறுகின்றார். தந்தையின் விருப்பத்தினை நன்கு உணர்ந்த இறை மகன் அதை நிறைவேற்ற தாகம் கொண்- டார். தந்தை ஒப்படைத்த வேலையை செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். தன்னுடைய விருப்பத்துக்கு முதலிடம் கொடுக்காமல் இயேசு கிறிஸ்து ஆண்டவர் தந்தையின் விருப்பத்துக்கே முதலிடம் கொடுத்தார். தந்தையின் அபிலாஷைகளை நிறைவேற்றினார். தான் வந்த நோக்கம் எல்லா மக்களையும் இறுதிநாளில் உயிர்த்தொழச் செய்வதேயாகும்.

**எம்பேரில்**

இரண்டாம் வருகைக்காக ஆயத்தப்பட்டு கொண்டிருக்கும் நானும் நீங்களும் எம்மை எவ்வாறு ஆயத்தப்படுத்திக் கொண்டு இருக்- கின்றோம். அழியும் உலகத்திலிருந்து அழியாத நித்திய ஜீவனை தருகின்ற வாழ்வுக்காக நிரந்தரமும் பரிசுத்த ஆவியானவர் பேரில் விழிப்புற்று வாழ்வோம்

அனைத்து விசுவாசிகளின் நாளை நினைவு கூரும் இன்று, எசாயா தீர்க்கதரிசி கூறியதைப் போல், அன்று நாம் அனைவரும் ஒன்றாக கூடும் போது, இவ்வார்த்தைகளின் அர்த்தத்தினை நாம் நேரிடையாகவே காணக்கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ***மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தினை ஆயத்தம் செய்வார்*** என்றும், அன்று எமது முகத்தை மூடியுள்ள முக்காடு அகற்றப்படும். எமது துன்பம் துகிலை தூக்கியெறிந்து சாவை ஒழித்து விடுவார். அப்போது நாம் அனைவரும் ஒரே குரலாக,

இவருக்காகவே
நாம் காத்திருந்தோம்,
இவர் தரும் மீட்பில்
நாம் மகிழ்ந்துஅக்களிப்போம்

என ஆர்ப்பரிப்போம்.

**செபம்.**

அன்பின் ஆண்டவரே! எம்மை உருவாக்கியவர் அரவணைப்பில் தங்குவதற்கு வரம் தாரும். இறைவனை முகமுகமாக தரிசித்து அவருடன் தங்கி வாழ அருள் புரியும்.

*அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்.*
*தம் பெயர்க்கேற்ப எனை*
*நீதி வழி நடத்துவார். (தி. பா. 23:3)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
03 புதன்

முதலாம்வாசகம்
பிலிப்பி
2: 12-18

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
27:1,4, 13-14

நற்செய்திவாசகம்
புனித லூக்காஸ்
24: 25-33

புனித மார்டீன்
தெபோரஸ்
நினைவு

### பரிசுத்தநற்செய்திலிருந்து

பெருந்திரளான மக்கள் இயேசுவோடு சென்று கொண்டிருந்தனர். அவர் திரும்பிப் பார்த்து அவர்களிடம் கூறியது 'என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள் சகோதரர் சகோதரிகள் ஆகியோரையும் ஏன் தம் உயிரையுமே என்னை விட மேலாகக் கருதினால் அவர் என் சீடராய் இருக்க முடியாது. ..... உங்களுள் தம் உடைமையையெல்லாம் விட்டு விடாத எவரும் என் சீடராய் இருக்க முடியாது. தம் சிலுவையை சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது. உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால் முதலில் உட்கார்ந்து அதைக் கட்டி முடிக்க ஆகும் செலவை கணித்து அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப் பார்க்க மாட்டாரா......

### ஒளியின் விழிப்புறுதல்

இன்றைய நற்செய்தியானது, எமது கண் மனம் இதயத்தை முழுமையாக இயேசுவை நோக்கியவாறு வாழவும், ஆண்டவர் இறை தந்தை மீது காட்டிய அசைவற்ற விசுவாசத்தை, எமதாக்கிக் கொண்டு வாழ்வதற்கும் வழிகாட்டுகின்றது. விசுவாசம் என்பது ஒளியாகும். அது இல்லாத ஒன்றைக் காண்பதற்குக் கிடைக்கின்ற ஒளியல்ல. மறைந்திருப்பதை வெளிப்பாடாக்கிக் கொள்வதற்காக வேண்டி கிடைக்கின்ற ஒளியாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவு செய்வதற்காக வேண்டி தமது தாயைக் கூட யோவானிடம் ஒப்படைத்தவாறு தாயுடனான தொடர்பையும் கைவிடுகின்றார். கை விடுதலின் பெறுமதியை எடுத்து கூறுகின்ற அவர் எல்லாவற்றையும் மேம்பட்ட சிலுவையை சுமந்து கொள்வதற்கான அழைப்பை விடுகின்றார். மனித அன்பு, புகழ், கௌரவம், வரவேற்பு மீது நிலைக்காது தந்தைக்கே உரிமையாவதற்கு அழைப்பு விடுக்கின்றார். இறை தந்தைதான் அனைத்தினதும் உரிமையாளர் என்பதை உணர்த்துகின்றார்.

### எம்பேரில்

முணுமுணுக்காமலும் வாதாடாமலும் யாவற்றையும் செய்ய புனித சின்னப்பர் அழைக்கிறார். பழையன கழிந்து புதியன உருவாகி, தன்னலம் துறந்து, இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ தூய ஆவியானவரின் வழிநடத்தலை வேண்டி இரஞ்சுவோம். செப வாழ்வின் முக்கியத்துவத்தையும் ஆழமான தியானத்தின் வழியாகவும் கிறிஸ்து நாதரை சந்தித்து அவரோடு இணைந்து அவரில் வேரூன்றியவர்களாக வாழ திடம் கொள்வோம். நாம் கற்றுக்கொண்ட விசுவாசத்தில் நிலைத்து வாழ்ந்து இறையரசைக் கட்டி எழுப்பிட தூய ஆவியானவரின் வரம் கேட்டு செபிப்போம்.

### செபம்

அப்பா தந்தையே! உமது மகனின் அழைப்பை ஏற்று இறை அரசிற்காக ஊழியம் செய்ய எம்மை அழைத்துள்ள அழைப்பிற்காக நன்றி. இயேசு ஆண்டவரை எமக்கு ஆயனாகவும் போதகனாகவும் தந்தமைக்காக நன்றி. கிறிஸ்து என்னும் மணமகனோடு உறவாடி, உரையாடி இணை பிரியாது அவரோடு வாழ வேண்டிய அறிவையும் ஆற்றலையும் எம்மீது பொழிந்தருளும். புதுப்படைப்பாக வாழ வரம் தாரும்.

*ஆண்டவரே என் ஒளி, (தி.பா27:1)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
04 வியாழன்

முதலாம்வெளிப்பாடு
பிலிப்பி
3:3-8

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
105:2-7

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்காஸ்
15:1-10

**பரி.நற்செய்தியிலிருந்து**

பரிசேயரும் மறை நூல் அறிஞரும் இவர் பாவிகளை வரவேற்று அவர்களுடன் உணவருந்துகிறாரே என்று முணுமுணுத்தனர். அப்போது அவர் அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார். உங்களுள் ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று காணாமற் போனால் ... காணாமற் போனதைக் கண்டு பிடிக்கும் வரை தேடிச்செல்ல மாட்டாரா? கண்டு பிடித்ததும் அவர் அதை மகிழ்ச்சியோடு தம் தோள் மேல் போட்டுக்கொள்ளவார். அது போலவே, மனம் மாறத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நேர்மையாளரைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணரசில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

*(நற்செய்தியை முழுமையாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

தூய ஆவியானவரே! எனது ஆன்மாவின் உற்ற நண்பரானவரே, இயேசுவின் உள்ளரங்க அனுபத்தைக் காண என்னை ஒளிமயமாக்கியருளும். ஆதாம் ஏவாள் இருவரும் ஆண்டவரின் வார்த்தைக்கு செவிசாய்க்காமல் செயறப்பட்டதினால் அன்றில் இருந்து இன்று வரை வழிந்தோடி வரும் சென்ம பாவக் கறையைப் போக்கவே இறைதந்தை தம்மை இவ்வுலகிற்கு அனுப்பினார் என்பதற்கு கிறிஸ்துநாதர் விழிப்புறுகின்றார். மனம் மாறி அப்பாவிடம் திரும்பி வருவோரை அப்பா தந்தை கட்டி அரவணைத்துக் கொள்ள ஆவலுடன் இருப்பதைக் காண்கின்றார். யோர்தான் நதியில் திருமுழுக்கு பெற்று கலிலேயாவில் தூதுப் பணியை ஆரம்பித்த அவர் *காலம் நிறைவேறிவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்* (புனி.மத்தே 1:15) என பறைசாற்ற ஆரம்பித்தார். அப்பா தந்தை, அவரின் சாயலாகப் படைத்த எல்லா மக்களும் அழிவு பெறாது நிலை வாழ்வு வாழ வேண்டும் என்பதே அப்பாவின் திருச்சித்தம் என்பதற்கு விழிப்புறும் அவர், பாவிகளைத் தேடிச் சென்று மனமாற்றத்திறகு உள்ளாக்கி அப்பாவின் விருப்பத்தினை நிறைவேற்றிடத் தாகம் கொண்டார். மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்த விண்ணரசில் உண்டாகும் மகிழ்ச்சியை எடுத்துக் காட்டுவதுடன் மனம்மாறி மனந்திருந்த வேண்டிய அவசியத்தினை இன்று எமக்கும் எடுத்துக் காட்டி பாவிகளைச் தேடிச் சென்று இறை அரசிற்குள் அழைத்து வர எமக்கும் அழைப்பு விடுக்கின்றார்.

**எமது பேரில்**

இறை அரசிற்கான மகனாக மகளாக தேர்ந்து எடுக்கப்பட்ட நாம் எமது அழைப்பிற்கு விழிப்புறுவோம். **"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை "** எனக் கூறக் கூடிய நிலையில் இருக்கின்றோமா? பாவத்தில் மூழ்கி வழி தவறிச் சென்றோரைத் தேடிச் சென்று மனமாற்றத்திற்குள்ளாக்கி இறை அப்பாவின் விண்ணரசிற்குள் அழைத்து வரவேண்டிய தாகம் எமக்கு இருக்கின்றதா? எமது பெலவீனங்களுக்கு விழிப்புறுவோம் எமது பாவங்களுக்கு விழிப்புற்று தினமும் சிலுவை அடிவாரத்திற்குச் சென்று இறை மகனின் கரங்களில் இருந்து வழிந்தோடி வரும் இரத்தத்தால், பேறுபெற்ற தாயாரின் கரங்களினால் எம்மை அபிசேகம் செய்ய இடமளித்து அப்பாவின் அரவணைப்பிற்குள்ளாகும் தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

**செபம்**

**ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள்! அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள் (தி.பா 105 : 4)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
05 வெள்ளி

முதலாம்வெளிப்பாடு
பிலிப்பி
3 : 17 - 4:1

பதிலுரைப்பாடல்
திபா
122: 1--5

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
16 : 1 - 8

புனித
சக்கரியாஸ்
எலிசபேத்
ஸ்நாபகரின்
பெற்றோர்
நினைவு

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

இயேசு தம் சீடருக்குக் கூறியது, செல்வர் ஒருவருக்கு வீட்டுப் பொறுப்பாளர் ஒருவர் இருந்தார். அவர் தம் தலைவரின் உடைமைகளைப் பாழாக்கியதாக அவர் மீது பழி சுமத்தப்பட்டது. தலைவர் அவரை கூப்பிட்டு உம்மைப் பற்றி நான் கேள்விப்படுவது என்ன? உம் பொறுப்பிலுள்ள கணக்கை ஒப்படையும். 'நீர் இனி வீட்டுப் பொறுப்பாளராக இருக்க முடியாது' என்று அவரிடம் கூறினார். அந்த வீட்டுப் பொறுப்பாளர் நான் என்ன செய்வேன். வீட்டுப் பொறுப்பிலிருந்து என் தலைவர் என்னை நீக்கி விடப்போகிறாரே மண் வெட்டவோ என்னால் இயலாது இருந்து உண்ணவும் வெட்கமாய் இருக்கிறது. வீட்டுப் பொறுப்பிலிருந்து என்னை நீக்கி விடும் போது பிறர் என்னை தங்கள் வீடுகளில் ஏற்றுக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என எனக்குத் தெரியும்' என்று அவர் தமக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

(பரி. நற்செய்தியை முழுமையாக வாசிக்கவும்)

## ஒளியின் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! உம் அன்பினால் எம்மை பற்றி எரியச் செய்யும். தலைவரின் உடைமைகளை பாழாக்கிய அவர் மீது சுமத்திய பழியை பொறுப்பாளனுக்கு தலைவன் வெளிப்படுத்தியும் மீண்டும் மீண்டும் தலைவனின் சொத்திலே கையாடி நூறு குடம் எண்ணெய் வாங்கியவருக்கு ஐம்பது என்றும் நூறு மூடை கோதுமை வாங்கியவருக்கு எண்பது என்று எழுதும் படியும் கூறுகிறார். தலைவர் அவரை பாராட்டுகிறார். ஒளியின் மக்களைவிட இவ்வுலகின் மக்கள் தங்கள் தலை முறையி-னரிடத்தில் மிக்க முன்மதிப்புள்ள வர்களாய் நடந்து கொள்கிறார்கள். செல்-வத்திற்கே அடிமையாகி றவர்கள் கடவுளுக்கு உகந்ததை எப்படி நேர்மையாக செய்வார்கள் என கூறுகிறார்.

## எம்மில் விழிப்புறல்

பிறரின் சொத்துக்களை விரும்புவது நேர்மையற்றது. நிறைவு அடைய முடியாதது. நேர்மையான உள்ளத்துடன் ஒருவர் எம்மை நம்பி தரும் சொத்தை தகுந்த முறையில் பலனுள்ளதாக்கி அவர்களிடம் ஒப்படைப்பதே சிறந்தது. நாம் இவைபற்றி சற்று சிந்தித்துப் பார்ப்போம் பிறரை கசக்கிப் பிழிவதில் கருத்தாய் இராமல் செல்வம் பெருகும் போது அதற்கு உள்ளத்தை பறிகொடாமல் கொள்ளையடிப்பதில் குறிப்பாயிராமல் இந்த உலக மாயையோ உலக செல்வமோ கடவுளிடமிருந்து எம்மை பிரிக்காதிருக்க அவரையே நாம் சிந்தனையில் கொள்வோம் அப்போது எங்களுக்கு உரியவற்றை இறைவன் தருவார்.

## செபத்திற்குள்ளாகுதல்

ஆண்டவரின் இல்லத்திற்கு போவோம் என்ற அழைப்பை நான் கேட்டபோது அகமகிழ்ந்தேன் என்றும் என் மனதில் சமாதானமும் மகிழ்ச்சியும் நிறைவதையும் நலம் பெருகுவதையும் காண்கிறேன். அன்பரே இறைவா! என் மனம் நிறைந்த நன்றி உமக்கே உரியது ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
06 சனி

முதலாம்வெளிப்பாடு
பிலிப்பி
4: 10 - 19

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
112 : 1-2, 5-6, 8-9

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
16: 9 - 15

### பரி.நற்செய்தியிலிருந்து

ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நேர்மையற்ற செல்வத்தைக் கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடிக் கொள்ளுங்கள். அது தீரும் பொழுது அவர்கள் உங்களை நிலையான உறைவிடங்களில் ஏற்றுக் கொள்வார்கள்.... நேர்மையற்ற செல்வத்தைக் கையாளுவதில் நீங்கள் நம்பத் தக்கவராய் இருந்தல் யார் உங்களை நம்பி உண்மைச் செல்வத்தை ஒப்படைப் பார்?... எந்த வீட்டு வேலையாளும் இருதலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ..... நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது' பண ஆசைமிக்க பரிசேயர் இவற்றையெல்லாம் கேட்டு இயேசுவை ஏளனம் செய்தனர். அவர் அவர்களிடம் கூறியது: நீங்கள் உங்களை மக்கள் முன் நேர்மையாளராகக் காட்டிக் கொள்கிறீர்கள். கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். நீங்கள் உங்களை மக்கள் முன் உயர்ந்தவர்களாகக் காட்டிக்கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும்.

### ஒளியின் விழிப்பு

ஒவ்வொரு உள்ளங்களுக்குள்ளும் அசைவாடி, உண்மையைக் காணும் தூய ஆவியானவரே! இயேசு மகனின் உள்ளத்தினைக் காண்பித்தருளும். பரிசுத்த ஆவியானவருக்குள் முழுமையாக வாழ்ந்த இயேசு அனைத்திலும் நேர்மையோடும், முன்மதியோடும் செயல்பட்டார். அவருடைய செயல்கள் அனைத்தும் நேர்மையானவையாக இருந்தன. எனவே அவர் தம்மைப் போல மக்கள் வாழ்வதை விரும்புகின்றார். நேர்மையைப் பற்றித் தெளிவாக விளக்கிக் கூறுகின்றார். சிறியவற்றில் நேர்மையாளராக இருக்கிறவர்கள், பெரியவற்றிலும் நம்பிக்கைக்குரியவரென எடுத்தியம்புகின்றார். நம்பிக்கை என்பது வாழ்க்கைக்கு மிக மிக அத்தியவசியம். எந்த வீட்டு வேலையாளும் இருதலைவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாது இருவருக்கு பணிவிடை செய்வது ஆபத்தானது என்பதனை வெளிப்படுத்தும் இயேசு உலக செல்வத்தைவிட அழியாத செல்வமாகிய கடவுளுக்குப் பணிவிடை செய்வதே பொருந்தும் என்கிறார். ஆகவே, உலக ஆசைகளுக்கு இடங்கொடாமல், இறைவனைப் பற்றிக் கொண்டு வாழ அனைத்து மக்களையும் அறிவுறுத்துகிறார்.

### எம் பேரில்

நானும் நீங்களும் கிறிஸ்தவ மறுமலர்ச்சியில் இருக்கின்றோம். எங்களுக்குள் இறை விருப்பம் நிறைவேறுகின்றதா? **"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"** இந்த உயிருள்ள வார்த்தைகளுக்குள் வாழ்கிறோமா? எதைக் கைவிடுவது எதைச் செய்வது என்பதில் தூய ஆவியானவரின் துணை வேண்டி நிற்போம். கிறிஸ்துவின் புத்திரத்தன்மைக்குள் வாழ்ந்து எமது சீடத்துவ சங்கத்தை கட்டி எழுப்புவோம்.

### செபம்

பரிசுத்தமான ஆண்டவரே! உமது புத்திரத்தன்மைக்குள் வாழ வரம் தாரும். இறைவனுக்கு ஏற்புடையதைச் செய்வதற்கு தூய ஆவியானவரே! எம்மை எடுத்துச் செல்லும்.

*ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர் (தி. பா. 112 : 1)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
07 ஞாயிறு

முதலாம்வெளிப்பாடு
2மக்கபே
7: 1-2, 9-14

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
17 : 1, 5-6, 8, 15

இரண்டாம்வெளிப்பாடு
2தெசலோ
2: 16-3:5

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
20: 27-38
அல்லது
20:27,34 - 38
பொ. கா. 32வது
ஞாயிறு

### அறிமுகம்

அனைவருக்காகவும் வேண்டி மரணத்திற்கு அன்பு செய்தவாறு ஜீவனை அரவணைத்துக் கொண்ட இறைமகன் பேரில் கண்களை ஏறெடுத்தவாறு கிறிஸ்தவ வாழ்க்கையில் மேலும் ஆழத்திற்குச் செல்வதற்கான புதிய வாரமொன்று இன்றுடன் ஆரம்பமாகின்றது. வாழ்வைப் பெறும் பொருட்டு நான் வந்துள்ளேன், என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர் என்று மொழிகின்ற ஆண்டவர் சதாகால வாழ்வின் உரிமையைப் பெறுகின்ற ஆசையோடு இறப்போர்க்கு அது கட்டாயம் கிடைக்குமென்று இன்றைய வெளிப்பாடுகள் எமக்கு எடுத்தியம்புகின்றன. கிறிஸ்துநாதருடைய உயிருள்ள தரிசனத்தை நிலைநிறுத்துவதற்கான ஆவியானவரது அருளைப் பெற்று அதற்காக நாமும் அர்ப்பணமாவோமாக! அதேபோன்று எம்மை விட்டுப் பிரிந்து சென்றோருக்கு ஆண்டவரை முகமுகமாகத் தரிசிக்கின்ற பாக்கியம் கிடைக்க வேண்டுமென்று அவர்களுக்காக இறைஞ்சுவோம்

### முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

அக்காலத்தில் சகோதரர்கள் எழுவரும் அவர்களுடைய தாயும் கைது செய்யப் பட்டார்கள்... சட்டத்துக்கு முரணாகப் பன்றி இறைச்சியை உண்ணும்படி மன்னனால் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ".....நீங்கள் எங்களிடமிருந்து கேட்டறிய விரும்புவது என்ன?... சட்டங்களை மீறுவதைவிட நாங்கள் இறக்கத் துணிந்திருக்கிறோம்...." அவர் இறக்கும் தறுவாயில் "கடவுள் மீண்டும் உயிர்த்தெழச் செய்வார் என்னும் நம்பிக்கை எனக்கு இருப்பதால் மனிதர் கையால் இறக்க விரும்புகிறேன். ஆனால் நீ வாழ்வு பெற உயிர்த்தெழ மாட்டாய் "என்றார்.

### ஒளியில் விழிப்புறுதல்

இறைவனை விட்டுப் பிரிந்து சிலைவழிபாடுகளில் ஈடுபட்டு வாழ்ந்த மக்களை எல்லாம் வல்ல இறைவனிடம் மீண்டும் சேர்ப்பதற்கான அழைப்பு பெலயீனனான மோயீசனுக்குக் கிடைக்கப் பெற்றிருந்தது. பத்துக் கட்டளைகள் ஊடாக மக்களை உண்மையான தரிசனத்திற்கு எடுத்து வருவதற்காக அவர் முழு மூச்சுடன் பணிபுரிந்தார். பாவங்களுக்கு, துர் நடத்தைகளுக்கு அடிமைப்பட்டிருந்த மக்களை மீண்டும் தம்மிடம் ஈர்த்துக்கொள்வதே எல்லாம் வல்லவருடைய திருவுள மாகியது. இந்த நீதி நெறிகளை உன்னதமானவையெனக் கருதி அதற்கேற்ப வாழ்ந்தோரும் இருந்ததோடு, குறுகிய எண்ணத்தோடு அதில் வாழ்வதாகக் கருதிக் கொண்டு போலி வாழ்வு வாழ்ந்தோரும் இருந்தனர். ஆண்டவருடைய கட்டளைகளுக்காக வேண்டி மரணத்தைத் தழுவுவது மேலானதெனக் கருதி வாழ்ந்த இந்த ஏழு சகோதரர்களுடைய வாழ்வு சவால் மிகுந்ததானதாகும். மனிதர் கையால் இறந்தாலும், ஆண்டவர் தங்களை மீண்டும் உயிர்த்தெழச் செய்வார் என்ற தளராத நம்பிக்கை அவர்களுள் இருந்தது. ஆண்டவரது வாக்குறுதி நிறைவேறும் வரையில் அவர்களின் மாபெரும் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். மேலும் மனிதரைத் திருப்திப்படுத்தும் விதத்தில் வாழும் வாழ்க்கை போலி வாழ்க்கை அல்லவா? நாங்கள் யாருக்காக வேண்டி வாழுகின்றோம்? (பெற்றார், பிள்ளைகள், குடும்பம், சங்கம் தேசம்...) எமது பகைவர்களுக்கு மன்னிப்பளித்து, அன்புடன் அவர்களோடு இணைந்து கொண்டு நற்செய்திக்காக வேண்டி சாட்சி பகர்வதற்கு நாம் தயாரா?.... இறை-வனுடைய வாக்குறுதியின் பேரில் எந்தளவு நம்பிக்கையுடன் இருக்கின்றோம்? விழிப்புற்றவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான எம்மைக் கண்டவாறு மனம் வருந்துவோம்....

### பரி. நற்செய்தியிலிருந்து

உயிர்த்தெழுதலை மறுக்கும் சில சதுசேயர் இயேசுவை அணுகி.... உயிர்த்தெழும் போது அவர் அவர்களுள் யாருக்கு மனைவி ஆவார்? ஏனெனில் எழுவரும் இவரை மனைவியாகக் கொண்டிருந்தனரே? என்று கேட்டனர். அதற்கு இயேசு ..... அவர்கள் வானதூதரைப் போல் இருப்பார்கள். உயிர்த்தெழுந்த மக்களாய் இருப்பதால் அவர்கள் கடவுளின் மக்களே.... அவர் இறந்தோரின் கடவுள் அல்ல: மாறாக வாழ்வோரின் கடவுள். ஏனெனில் அவரைப் பொறுத்த மட்டில் அனைவரும் உயிருள்ள வர்களே என்றார்.

### ஒளியில் விழிப்புறுதல்

கிறிஸ்துநாதர் தந்தையை நன்கு அறிந்தவராவார். தந்தையைப் பற்றிய வெளிப்பாட்டினை நற்செய்தியை மக்களுக்குக் கொடுப்பதற்காக வேண்டி அவரது இதயத்தில் இருந்த தீ, தாகம் ஒருபோதும் அணைந்துவிடவில்லை. தொடக்கத்திலிருந்தே பல் வேறுவிதமான நபர்கள் நிகழ்வுகள் ஊடாக இறைவன் வெளிப்பாடாகிய போதிலும் அது கிறிஸ்து நாதர் வழியாகவே பூரணமாகியது. மோயீசனின் நீதி நெறிகளை கடுகளவேனும் பிசகாது கடைப்பிடிக்கினற பரிசேயர், சதுசேயர், மறைவல்லுனர்கள் கிறிஸ்து நாதரை தமது வலையில் சிக்க வைத்துக் கொள்வதற்கு முயன்ற போதிலும் அவர்களது போலியான வேடத்தை இனங்கண்டு கொண்ட இயேசு அதில் சிக்கிக் கொள்ளவில்லை. எப்போதும் அவர்களுக்குச் சவால் விடுத்த இறைமகன் இயேசு உண்மையான இறையன்போடு அவற்றைப் பூரணமாக்கிய புதிய மோயீசன் ஆனார். மறுவாழ்வைப் பற்றி எழுப்பிய கேள்விகளுக்கு மோயீசனின் சட்டதிட்டங்களை உதவியாக்கிக் கொண்டே அவர் மறுமொழி கூறுகின்றார். புத்திரத் தன்மையில் மகுடம் அங்குதான் இருக்கிறதல்லவா? உலகில் வாழ்ந்தாலும் உலகைச் சாராதவர்களாக, இறைவனுக்கு மாத்திரம் உரியவர்களாக, அவருக்காக மாத்திரம் நாங்கள் வாழவேண்டும் என்று கூறுகின்றார். எனவே நாம் எப்போதும் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்து அவரோடு உறவுகொண்டு வாழுவதற்கான தாகத்தை ஏற்படுத்துவோம். அதற்கான வல்லமையை வேண்டுவோம்.

### இரண்டாவது வெளிப்பாடு

நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவும் நம்மீது அன்பு கூர்ந்து தம் அருளால் நிலையான ஆறுதலையும் எதிர்நோக்கையும் அளித்த நம் தந்தையால் கடவுளும் உங்கள் உள்ளங்களுக்கு ஊக்கமளித்து, நல்லதையே சொல்லவும் செய்யவும் உங்களை உறுதிப்படுத்துவாராக!... நம்பிக்கை எல்லாரிடமும் இல்லை. ஆனால் ஆண்டவர் நம்பிக்கைக் குரியவர் அவர் உங்களை உறுதிப்படுத்தி தீயோரிடமிருந்து காத்தருள்வார்...

### ஒளியில் விழிப்புறுதல்

பெலயீனமிக்க எம்மை விசுவாசத்தின் எதிர்பார்ப்பின் வாழ்வு வாழ புனித சின்னப்பர் அழைப்பு விடுக்கின்றார். குறைவான விசுவாசத்துடனில்லாமல், நிலையான அதிஷ்டானத்தில் தங்கி வாழ விழிப்புறுத்துகின்றார். ஆண்டவர் பேரில் புனித சின்னப்பர் கொண்டிருந்த விசுவாசம் எம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குகின்றது. சட்ட திட்டங்களை பிசகாது அனுசரித்த பரிசேயராகிய அவர், அன்பின் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட விதம்...? அன்று அவர் சங்கத்திடம் விடுத்த வேண்டுகோளை இன்று நாம் விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டு அனைத்து நன்மைகளையும் செய்வதற்கான தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

### செபத்திற்குள்ளாகுதல்

சீவியத்தின் ஊற்றாகிய இயேசு ஆண்டவரே! உம் வழியாக நாம் பெற்றுக் கொண்ட மீட்புக்காக உம்மைப் புகழுகின்றோம். சதாகால வாழ்வை நோக்கி எம்மை எடுத்துச் சென்றருளும். தூய ஆவியானவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

கார்த்திகை
08 திங்கள்

முதலாம்வெளிப்பாடு
தீத்து
1: 1 - 9

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
24: 1 - 6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
17: 1 - 6

## பரி. நற்செய்தியிலிருந்து

இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது "பாவத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஐயோ! அதற்குக் காரணமாய் இருப்பவர்க்குக் கேடு!" அவர் சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வதைவிட அவ்வாறு செய்பவரது கழுத்தில் ஒரு எந்திரக் கல்லைக் கட்டி அவரைக் கடலில் தள்ளிவிடுவது அவருக்கு நல்லது. எனவே நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். உங்களுடைய சகோதர சகோதரிகளுள் ஒருவர் பாவம் செய்தால் அவரைக் கடிந்து கொள்ளுங்கள்..... திரும்பி வந்து "நான் மனம் மாறி விட்டேன்" என்று சொல்வாரானால் அவரை மன்னித்து விடுங்கள்....

## ஒளியின் விழிப்பு

இறைமகன் இயேசுவின் உள்ளரங்க அனுபவத்தைத் தியானிக்க தூய ஆவியானவரே எனக்கு வழிகாட்டியருளும்.

பாவிகளை மீட்க, பாவ உலகில் தம்மை மனுவுருவாக இடமளித்த அப்பா தந்தையின் அன்பை அனுபவிக்கும் இயேசு நாதர் தான் பெற்ற புத்திரத்தன்மையின் உரிமையுடன், மன மாற்றத்தையும் மன்னிப்பையும் மக்கள் மனதில் விதைக்கின்றார். இறைதந்தையின் அரவணைப்பை பெற்றுக் கொள்ள மனமாற்றத்துடன் அவரில் நம்பிக்கையுடன் வாழவேண்டும் என்பதே அவர் திருவுளமாக இருந்தது. மன்னிப்புக்கு எல்லை இல்லை. மனிதன் பெலயீனன் வழி தவறக் கூடியவன். ஆகவே அவன் திரும்பி வரும் ஒவ்வொரு வேளையிலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றார். பாவம் செய்தவனுக்கு மன்னிப்பு உண்டு. ஆனால் மற்றவரை பாவத்தில் விழுத்திய வருக்கோ மன்னிப்பு இல்லை என்பதைத் தெளிவாகக் கூறுகின்றார். தமது சீடர்களின் வேண்டுகோளுக்குச் செவிமடுக்கும் இயேசு அவர்கள் பெலயீனங்களை உணர்ந்து அவர்களைத் திடப்படுத்துகின்றார். நம்பிக்கை என்னும் கொடையைப் பெற்றுள்ள நீங்கள் அதில் வாழுங்கள். இறை தந்தையின் அன்பில் நிரம்பி வாழுங்கள் என அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

## எம் பேரில்

தூய்மையான நல் வாழ்வுக்கு ஆண்டவரிடமிருந்து அழைப்பு. ஒருவர் செய்த தவறை உணர்ந்து, அதற்காக மனம் வருந்தும் ஒவ்வொரு வேளையும் மன்னிப்பு அவருக்கு உண்டு. தவறுகளைச் செய்வதைவிட மற்றவர் தவறு செய்ய நான் காரணமாக இருந்தால் தண்டனையை அனுபவிக்க வேண்டியவன் நான். பாவம் செய்யும் பொழுது எனக்கு எதிராக, என் சகோதர சகோதரிக்கு எதிராக, ஆண்டவரின் தூய அன்பிற்கு எதிராக நான் செயற்படுகின்றேன். பாவம் சிறியதாக இருந்தாலும் அதன் விளைவு எவ்வளவு பாரதூரமானது. எமது குடும்பத்தில் சங்கத்தில் கிராமத்தில் தேசத்தில் மற்றவரை பெலயீனங்களுடன் அன்பு செய்து அவர்களை ஏற்றுக்கொள்ள முடியுமா? இயேசு என்னிடம் எதிர்பார்ப்பது என்ன? இறை விருப்பம் நிறைவேற்ற வரம் வேண்டுவோம். இயேசுவுக்குச் சான்று பகிர்ந்து இறை அரசை கட்டியெழுப்ப முன்வருவோம்.

## செபம்

அப்பா தந்தாய்! நாம் மற்றவர் குற்றங்களை மன்னிப்பது போல நீர் எங்கள் குற்றங்களை மன்னிக்கின்றீர். மற்றவருக்கு மன்னிப்பளித்து அவர் பெலயீனங்களில் அவரை அன்பு செய்து வாழ எனக்கு வல்லமையையும், சங்கம ஒற்றுமைக்கு உள்ளாக, சங்கத்தை நல்வழி நோக்கி எடுத்துச் செல்ல தூய மனதையும் ஆவியின் திருப்பொழிவுகளையும் எனக்கு அளித்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
09 செவ்வாய்

முதலாம்வெளிப்பாடு
எசேக்கியேல்
47: 1-2, 8-9, 12

பதிலுரைப் பாடல்
திருப்பாடல்
46: 3-6, 7-8

இரண்டாம்வெளிப்பாடு
1கொரிந்தி
3:9-13,16-17

நற்செய்திவெளிப்பாடு
புனித யோவான்
2: 13-22

இலத்திரன் பேராலய
நேர்ந்தளிப்பு
நினைவு

## பரி.நற்செய்தியிலிருந்து

யூதர்களுடைய பாஸ்கா திருவிழா நெருங்கியிருந்ததால், இயேசு ஜெருசலேமுக்கு சென்றார். கோயிலிலே ஆடு, மாடு, புறா விற்பவர்களையும், அங்கே உட்கார்ந்திருந்த நாணயமாற்றுவோரையும் கண்டார். அப்போது கயிறுகளால் சாட்டை பின்னி அவர்கள் எல்லோரையும் கோவிலிருந்து துரத்தினார் ....... அவருடைய சீடர் அவர் இவ்வாறு சொல்லியிருந்தை நினைவு கூர்ந்து மறைநூலையும், இயேசு கூறிய வார்த்தைகளையும் விசுவசித்தனர்.

## ஒளியின் விழிப்பு

என் ஆருயிர் நண்பரான தூய ஆவியானவரே, இந்நற்செய்திப் பகுதிக்குள் இயேசு ஆண்டவரின் உள்ளாந்தர நிலையை எனக்கு வெளிப்படுத்தியருளும். தந்தையின் ஆலயத்தினை வாணிப கூடமாக்கி நடைபெறுகின்ற பயங்கரமிகு கொள்ளை, ஏமாற்று வித்தைகளை கண்ட இறைமகனானவர், அனைவரையும் விரட்டியவாறு அதனை புனிதப்படுத்தும் நிகழ்ச்சியினை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிகழ்ச்சியை உருவகச் சித்திரமாக காண ஆவியானவர் என்னை வழிநடத்தினார்.

நீங்கள் இறைவனின் ஆலயம் என்பதை அறிவீர்களல்லவா? இந்த ஆலயத்தில் நடைபெறும் கொள்ளைகள், கனவுகள், சுயநலப் போராட்டங்கள் எத்தனை? விழிப்புறுங்கள். இறைமகனிடம் திரும்புங்கள் உங்கள் பெலவீனங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். அவரோ அனைத்தையும் தகர்த்து எறிந்து விட்டு உங்களைப் புனிதப்படுத்துவார். அப்போது தந்தையின் மகிமை மாட்சிமை வெளிப்படும் புனித ஆலயமாவீர்கள். ஆவியானவரின் ஒலிக்கு விழிப்புற்ற நான் என்னை முழுமையாக இறைமகனிடம் கையளித்தேன்.

இவ்வார்த்தைகளை இயேசு சொன்னதின் பின் உமது இல்லத்தின் மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும் என்று எழுதி உள்ளதைப் பற்றி நினைவு கூர்ந்தனர். இவற்றையெல்லாம் செய்வதைப்பற்றி யூதர் அறிகுறி கேட்கின்றனர். அதற்கு இயேசு இவ்வாலயத்தை இடித்துவிடுங்கள். அதைமூன்று நாளில் கட்டுவேன் என்று அதிகாரத்துடனும், இறைவல்லமையுடனும் கூறுகின்றார். ஆலயம் என்று அவரது உடலாகிய ஆலயத்தையே குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு மனிதனின் சரீரமும் தூய ஆவியானவர் வாழும் ஆலயம் என்பதை எடுத்துக்காட்டுகின்றார்.

## எம் பேரில்

நாம் ஒன்று கூடும் இடங்களில் அதிகாரம், பணம், வல்லமை, பதவி செயல்படுவதைக் கண்டால், அன்று கோவிலில் இயேசு ஆண்டவர் செயற்பட்டதைப் போல, இறைபுத்திரத்தன்மையுடன் தூய ஆவியானவருக்குள் விழிப்புற்று எமக்கும் செயற்பட முடியுமா? சிந்திப்போம்.

## செபத்திற்குள்ளாகுதல்

ஆண்டவரே உமது செயல்கள் மேன்மையும் மாண்பும் மிக்கது. உமது நீதி என்றென்றைக்கும் நிலைத்துள்ளது. உமக்கு அஞ்சி நடப்போருக்கு நீர் உணவு அளிக்கிறீர். ஆண்டவரே, நீர் அருளும் இரக்கமும் உடையவர். நெஞ்சார ஆண்டவரே நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன் ஆமென்.

*கடலின் அலைகள் கொந்தளித்துப் பொங்கினாலும், ..... எங்களுக்கு அச்சமென்பதே இல்லை. (தி.பா. 46:3)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

கார்த்திகை
10 புதன்

முதலாம்வெளிப்பாடு
தீத்து
3 : 1 - 7

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
23 : 1-6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்காஸ்
17: 11 - 19

புனித பெரிய
லியோ நினைவு
(சிங்கராயர் பாப்பு)

## முதலாம் வெளிப்பாடு

ஏனெனனில் நாமும் ஒரு காலத்தில் அறியாமையில் இருந்தோம். கீழ்ப்படியாமல் இருந்தோம். நெறி தவறிச் சென்றோம்.... நம் மீட்பராம் கடவுளின் நன்மையும் மனித நேயமும் வெளிப்பட்ட போது, நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாக் தம் இரக்கத்தை முன்னிட்டு புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் தூய ஆவியினாலும் கடவுள் நம்மை மீட்டார். அவர் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்து நாதரின் வழியாகத் தூய ஆவியானவரை நம்மீது பொழிந்தார். நாம் அவருடைய அருளால் அவருக்கு ஏற்புடையர்களாகி, நாம் எதிர்நோக்கி இருக்கும் நல்ல வாழ்வை உரிமைப் பேறாகப் பெறும் பொருட்டே இவ்வாறு செய்தார்.

## ஒளியின் விழிப்புறுவோம்

ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும் மாசற்ற அன்பானவரே வருக! இறை அன்பைப் புரிந்து ஏற்று வாழ்வதற்கு ஒளியைத் தருக!

திருத்தூதரான புனித பவுல், நற்செய்தியின் தூதுவனாக அனுப்பப்பட்ட தீத்துவிற்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி இதுவாகும். இக்கடிதத்தில் அவர் தாம் பெற்ற அனுபவத்தினை வெளிப்படுத்தி, இறை அன்பும், இரக்கமும் தம்மை வழிநடத்திய விதத்தை அறிக்கையிட்டு, இறை அன்பின் மேன்மையை மக்களுடன் பகிர்ந்து வாழ தீத்துவிற்கு அழைப்புக் கொடுக்கின்றார். இன்று அவருடைய கடிதத்தினை வாசிக்கும் நாம் புதுப்பிறப்படைய என்ன செய்ய வேண்டும் என்பதற்கு விழிப்புறுவோம்.

**நாம்**

- இறை வார்த்தையை ஏற்று,
- அதனை எம்முள் வளரச் செய்து,
- நாம் அனுபவிக்கும் விடுதலையை, நிலைவாழ்வை அனைவரோடும் பகிர்ந்து கொள்வோமா?

இன்றைய நற்செய்தி வெளிப்பாட்டில், குணம் பெற்ற தொழு நோயாளர் பத்துப் பேரில், மீண்டும் திரும்பி வந்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் தொழு நோயாளியின் சிறப்பான பண்பை மகனானவர் வெளிப்படுத்துகின்றார். ஆகவே இறைவனால் புதுப்பிறப்பு அடைந்த நாம், இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக, திரு மகனானவரை நோக்கி இருப்போம். வாழ்வு பெறுவோம். பெற்ற வாழ்வை மற்றவர்களுக்கும் வழங்குவோம்.

## செபத்திற்குள்ளாவோம்

*அன்புத் தந்தாய்! புதுப் பிறப்பளிக்கும் நீரினாலும், புதுப்பிக்கும் ஆவியினாலும், எமக்கு நிலை வாழ்வை, விண்ணக உரிமை வாழ்வை அளித்தமைக்காக உமக்கு நன்றி செலுத்துகின்றோம். உமது அருட் வரப்பிரசாதத்தால், பெற்றுக்கொண்ட முடிவில்லாத வாழ்வை இழந்துவிடாது, ஒவ்வொரு கணத்திலும் ஆவியானவருக்குள் விழிப்புற்று வாழும் உன்னத கொடையை எமக்களித்தருளும்.*

## திருப்பாடலிலிருந்து

ஆண்டவரே என் ஆயன்.
எனக்கேதும் குறையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
11 வியாழன்

முதலாம்வெளிப்பாடு
பிலமோன்
1:7 - 20

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
146:7 - 10

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
17: 20 - 25

தூரின் நகர்
புனித மார்ட்டின்
நினைவு

**பரி.நற்செய்தியிலிருந்து**

இறையாட்சி எப்போது வரும் என்று பரிசேயர் இயேசுவிடம் கேட்டனர். அவர் மறுமொழியாக இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது..இதோ இங்கே, அல்லது அதோ அங்கே! எனச் சொல்ல முடியாது. ஏனெனில் இறையாட்சி உங்கள் நடுவேயே செயல்படுகிறது. என்றார். பின்பு அவர் சீடர்களை நோக்கிக் கூறியது, ஒரு காலம் வரும். அப்போது மானிட மகனுடைய நாள்களில் ஒன்றையாவது காண நீங்கள் ஆவலாய் இருப்பீர்கள். ஆனால் நீங்கள் காண மாட்டீர்கள். அவர்கள் உங்களிடம் இதோ இங்கே! அதோ அங்கே என்பார்கள். ஆனால் நீங்கள் போக வேண்டாம். அவர்களைப் பின்தொடரவும் வேண்டாம். வானத்தில் மின்னல் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வரைக்கும பளீரென மின்னி ஒளிர்வது போல மானிட மகனும் தாம் வரும் நாளில் தோன்றுவார். ஆனால் முதலில் அவர் பல துன்பங்கள் பட்டு இந்தத் தலைமுறையினரால் உதறித் தள்ளப்படவேண்டும்.

**ஒளியின் விழிப்புறுதல்**

அன்பின் ஆவியானவரே! வரங்கள் பலவற்றால் எம்மை நிரப்பி வழிநடத்து- பவரே, இன்றைய நற்செய்தியில் என் இயேசுவின் உள்ளாந்தரத்தினை அறிந்திட எனக்கு உதவியருளும்.

இறையாட்சி என்ற வார்த்தையின் அர்த்தத்தை புரியாத மக்கள், இறையாட்சி எப்போது வரும் என்று இயேசுவிடம் கேட்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் இறையாட்சி எங்கோ இருந்து எப்போதோ வரப் போகிறது ஒன்றாகும் என்பதுவே. இறை விருப்பத்தை அறிந்து அவரது விருப்பத்திற்கு இடமளித்து, அவருடைய வழிகாட்டுதலோடு நாம் நம் வாழ்க்கைப் பயணத்தை தொடருகையில் அவர் நம் மத்தியில் இருந்து நம்மை ஆட்சி செய்வார். அவரது ஆளுகைக்கு நாம் தாழ்ச்சியோடு இடமளிக் கையில், அங்கே இறையாட்சி செயல் படுகிறது. அதனால் தான் இறையாட்சி உங்கள் நடுவிலேயே செயல்படுகிறது என இயேசு கூறுகிறார்.

**எம்பேரில்**

நாம் எவ்வாறு வாழ்கிறோம்? எம்முள் எம் மத்தியில் இறையாட்சி வெளிப்படுகிறதா? சங்கமமாகும் இடத்தில் அன்பு, சமாதானம், மகிழ்ச்சி, பொறுமை, தயவு, நற்குணங்கள் எனும் ஆவியானவரது கனிகள், கொடைகள் புலப்படுகையில் அவருடைய ஆட்சி வெளிப்படுகின்றது. ஆவியானவரின் கனிகளைக் கொடைகளை அனுபவிக்கையில் மாபெரும் வல்லமையை நாம் அனுபவிக்கின்றோம் விடுதலையை, சுதந்திரத்தை அனுபவிக்கின்றோம் எங்களுக்குள்ளே அவரைக் காண்போம். இதோ இங்கே அதோ அங்கே என்று ஒவ்வொருவர் காட்டும் திசைகளை நோக்கி ஓடுபவர்கள் குறைவான விசுவாசமுள்ளவரே. கனிகளை கொடைகளை அனுபவித்து எம் மத்தியில் இறை அரசை நிலை நாட்டுவோம்

**செபம்**

நீர் தேர்ந்து கொண்ட உமது இராட்சியத்தில் .......
(புபுது கீதாஞ்சலி 95)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
12 வெள்ளி

முதலாம்வெளிப்பாடு
2யோவான்
1:4-9

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
119 : 1 -2,
10-11,17-18

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
17: 26-37

புனித யோசபாத்
(ஆயர்,மறைசாட்சி)

**பரிசுத்தநற்செய்திலிருந்து**

நோவாவின் காலத்தில் நடந்தது போலவே மானிட மகனுடைய காலத்திலும் நடக்கும். நோவா பேழைக்குள் சென்ற நாள் வரை எல்லாரும் திருமணம் செய்து கொண்டும் உண்டும் குடித்தும் வந்தார்கள். வெள்ளபெருக்கு வந்து அவர்கள் அனைவரையும் அழித்தது. ...... மானிட மகன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். அந்நாளில் வீட்டின் மேல் தளத்தில் இருப்பவர் வீட்டிலுள்ள தம் பொருள்களை எடுக்கக் கீழே இறங்க வேண்டாம். அது போலவே வயலில் இருப்பவர் திரும்பி வரவேண்டாம். லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள். தம் உயிரைக் காக்க வழிதேடுவோர் அதை இழந்துவிடுவர். தம் உயிரை இழப்பவரோ அதைக் காத்துக்கொள்வர்.

**ஒளியில் விழிப்புறதல்**

கிறிஸ்து வாழ்ந்த காலத்திலும் மக்கள் இறைவனை மறந்து, தான் தோன்றித் தனமாக, உலக இயல்பின்படி வாழ்ந்தார்கள். இதனைக் கண்ட கிறிஸ்து வேதனைப்பட்டிருப்பார். முழு மனுக்குலமும் மீட்பு பெற வேண்டுமென்று அபிலாசை கொண்ட கிறிஸ்து தந்தையின் அன்பை புறக்கணிப்போர்க்கு தண்டனையுண்டு என்பதை வலியுறுத்துகின்றார். அதை அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பழைய ஏற்பாட்டில் நடந்த சம்பவமான நோவாவின் வெள்ளப்பெருக்கையும் லோத்தின் சம்பவத்தையும் கூறுகின்றார். தந்தையின் அன்பை பல விதங்களில வெளிப்படுத்தியவர் தந்தை நீதியானவர் என்பதையும் எடுத்தியம்புகின்றார்.

**எம் பேரில்**

கிறிஸ்துவின் 2வது வருகையைப் பற்றி இன்றைய நற்செய்தியில கூறப்படுகின்றது. இப்பகுதியை நாம் பலமுறை வாசித்திருப்போம். எம் வாழ்வில் இதையிட்டு மாற்றம் ஏற்பட்டுள்ளதா என சிந்திப்போம். அன்றைய நாளில் நோவா பேழை செய்த போதும் அம்மக்கள் இது எப்போது நிகழும் என்று உதாசீனப்படுத்தியதைப் போல நாமும் இன்று வாழ்கின்றோமா? அனைவரும் மனம் திருந்தி இறையரசுக்குள் வரவேண்டும் என்பதற்காக இறைவன் காலம் தாழ்த்துகின்றார். இறைவனின் இரக்கமான காலத்தை அனுபவிக்கும் நாம் இறைவனின் நீதியான காலத்தில் எங்கே இருப்போம். இன்றைய நாளில் சிந்திக்க அழைக்கின்றார். பேழைக்குள் நுழைந்த நோவாவும் குடும்பத்தினரும் காப்பாற்றப்பட்டதைப் போல, கிறிஸ்து என்ற பேழைக்குள் நாம் தஞ்சமடைந்தால் தான் எமக்கு மீட்புண்டு. இன்றைய முதலாம் வெளிப்பாட்டில் யோவானும் இதையே வலியுறுத்தி கூறுகின்றார். வேதாகமத்தில் குறிப்பிட்டப்படி கிறிஸ்துவின் 2வது வருகைக்கான பல அறிகுறிகளை நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்நாளில் எம் வாழ்வையிட்டு விழிப்புறுவோம். கிறிஸ்துவை ஒரே ஆண்டவராக ஏற்று அவர் கூறிய அன்பின் வாழ்வை வாழ்வோம். மற்றவர்களும் இவ் வாழ்க்கை வாழ உதவி செய்வோம்.

**செபம்**

இரக்கமும் தயையும் நிறைந்த தேவனே! என் வாழ்நாளில் ஒவ்வொரு கணமும் உமது விருப்பத்தினை நிறைவேற்றி உம்முடன் இணைந்து வாழ விரும்புகின்றேன். என்னை எம்மைப் பாதுகாத்தருளும்.
ஆமென்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
13 சனி

முதலாம்வெளிப்பாடு
3யோவான்
1:1-8

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
112 : 1 - 6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
18: 1-8

புனித
ஸ்தனிஸ்லாஸ்
(இளந்துறவி)

**பிரசுத்தநற்செய்திலிருந்து**

நடுவர் ஒருவர் இருந்தார். அவர் கடவுளுக்கு அஞ்சி நடப்பதும் இல்லை, மக்களையும் மதிப்பரில்லை. அந்நாளில் கைம்பெண் ஒருவரும் இருந்தார். அவர் நடுவரிடம் போய் என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும் என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். நடுவரோ நெடுங்காலமாய் எதுவும் செய்ய விரும்பவில்லை.... இக்கைம்பெண் எனக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருப்பதால் நான் இவருக்கு நீதி வழங்குவேன்... பின் ஆண்டவர் அவர்களிடம் நேர்மையற்ற நடுவர் இப்படிச் சொன்னார் என்றால் தாம் தேர்ந்து கொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரல் இடும் போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா?... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)

## ஒளியில் விழிப்புறுதல்

காலம் தாழ்த்தும் அன்பு உறுதியான அன்பு என்று நாம் வேதாகமத்தில் காண்கின்றோம். இன்று இயேசு நற்செய்தியினூடாக எமக்கு வெளிப்படுத்தும் இந்த உவமை எமது வாழ்க்கையில் ஏற்படும் காலந்தாழ்த்தும் வேண்டுதல் நிச்சயமாக கிடைக்கும் என்ற ஒரு உறுதியான நம்பிக்கையின் உவமையாக அமைந்துள்ளது. அதுமட்டுமல்லாது அவருடைய மறை இரகசியமான அன்பின் இலட்சணம் இதுதான் என்பதை இன்றைய ஒளியின் விழிப்புறுதலினூடாக எமக்குத் தெளிவாகின்றது. தேர்ந்து கொள்ளப்பட்ட எம்முடைய அரைகுறை விசுவாசத்திற்கும் இன்றைய இயேசுவின் உவமை ஒரு சவாலாக அமைந்துள்ளது. நிறைகுடம் ஒருபோதும் தழும்பாது. எனவே எல்லா நிகழ்ச்சிகளையும் ஏழாம் (ஒளியின்) கண் கொண்டு நோக்குவோமாக.

## எம் பேரில்

இன்றைய நாளில் இக்கடிதத்தை எழுதும் போது என் வாழ்க்கையில் நான் எடுக்கின்ற எல்லா முயற்சிகளும் தோல்வியாகவே முடிகின்றது. என்னுடைய மனதிலே நிம்மதியற்ற நிலை. ஏன் ஆண்டவர் என்னுடைய வேண்டுதலுக்குச் செவிசாய்க்கவில்லை என்ற ஒரு அங்கலாய்ப்பு. தனிமையுணர்வு, இப்பேர்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் இக்கடிதத்தை வெறுப்போடு எழுதத் தொடங்கினேன். ஆயினும் இயேசு கிறிஸ்துவின் வாயிலாக இன்றைய நாளில் வெளியாகின வார்த்தைகள் என் உள்ளத்தை ஊடுருவிச் சென்றன. மரித்துப்போயிருந்த என் விசுவாசம் மீண்டும் உயிர் பெற்றது. என்னோடு எனக்குள் தங்கியிருக்கும் தூய ஆவியானவர் எனக்கு ஒரு புது வல்லமையைத் தந்து என்னை நிரப்பியதை நான் உணர்ந்தேன்.

## செபத்திற்கு உள்ளாகுதல்

*அப்பா தந்தையே! உம் முகத்தை நோக்கி பயணிக்கும் போது எமக்கு ஏற்படும் அனைத்து சோதனைகள், தடைகள், வேதனைகள் அனைத்தினூடாகவும் உம்மை நெருங்கி வர உம் ஒளியும் வல்லமையுமான தூய ஆவியைத் தந்து வழிநடத்தியருளும். ஆமென்.*

**ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறு பெற்றோர். அவர் தம் கட்டளைகளில் அவர்கள் பெரு மகிழ்ச்சி அடைவர்.**

**(தி.பா. 112: 1,4)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
14 ஞாயிறு

முதலாம்வெளிப்பாடு
மலாக்கி
4 : 1-2

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
98 : 5-9

இரண்டாம்வெளிப்பாடு
2தெசலோனி
3: 7 - 12

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
11: 42-46

பொ.கா 33வது
ஞாயிறு

அனைத்து உலக பெருமதிகளுக்கும் தொடக்கத்தைப் போலவே முடிவும் இருக்கின்றது. அனைவரும் அறிந்த உண்மை இதுவாகும். உலக முடிவைப் பற்றி திருச்சபைத் தாயானவள் இன்று எமக்கு நினைவுறுத்துகின்றார். அந்த நாளில் இருள் மிகுந்த தாக்கங்கள், அழிந்து போவதோடு, நீதிமான்கள் மீட்கப்படுவார் என்று இன்றைய முதல் வெளிப்பாடு எமக்குக் கூறுகின்றது. இவ்வுலகில் வாழும் காலப்பகுதியில் உலகத்திற்கு பாரமாய் இராது, தம்மைப் போல மற்றவர்களுக்கு முன் மாதிரியாக உள்ளவர்களாயும், பயனுள்ளவர்களாகவும் வாழுமாறு புனித. சின்னப்பர் எமக்கு அறிவுறுத்துகின்றார். போலிக் கிறிஸ்துவுக்கு ஏமாறாது, இறுதி வரை உறுதியுடன் இருப்போர் மீட்படையவர் என்று பரிசுத்த நற்செய்தி வழியாக இயேசு இன்று எமக்குக் கூறுகின்றார். ஆனபடியால் இறை விருப்பத்தைத் தேடி வாழ்வதற்கான வல்லமையும் வேண்டி செபிப்போம்.

## முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

இதோ! சூளையைப்போல் எரியும் அந்த நாள் வருகின்றது. அப்போது ஆணவக்காரர், கொடுமை செய்வோர் அனைவரும் அதனுள் போடப்பட்ட சருகாவர். வரப்போகும் அந்த நாளில் அவர்களுடைய வேரையோ கிளையையோ விட்டு வைக்காது முற்றிலும் சுட்டெரித்து விடும். என்கிறார். படைகளின் ஆண்டவர். ஆனால் என் பெயருக்கு அஞ்சி நடக்கின்ற உங்கள் மேல் நீதியின் கதிரவன் எழுவான். அவனுடைய இறக்கைகளில் நலம் தரும் மருந்து இருக்கும்...

## பரிசுத்த நற்செய்தியிலிருந்து

*...நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பலர் என் பெயரை வைத்துக் கொண்டு வந்து நானே அவர் என்றும் காலம் நெருங்கி வந்து விட்டது என்றும் கூறுவார்கள். அவர்கள் பின்னே போகாதீர்கள்... இவை அனைத்தும் நடந்தேறு முன் அவர் கள் உங்களைப் பிடித்துத் துன்புறுத்து வார்கள்.... என் பெயரின் பொருட்டு அரசரிடமும் ஆளுநரிடமும் இழுத்துச் செல்வார் கள்... என் பெயரின் பொருட்டு எல்லாரும் உங்களை வெறுப்பார்கள். இருப்பினும் உங்கள் தலைமுடி ஒன்று கூட விழவே விழாது. நீங்க் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்....*

## ஒளியின் விழிப்புறுதல்

இந்த இரு வெளிப்பாடுகளிலும் இரு சாராரைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது... இந்த திருவெளிப்பாடுகளை முழுமையாக தியானித்து வாசிக்கும்பொழுது எமக்கு ஏற்படுகின்ற உள்ளுர உணர்வுகளை இனங்கண்டு கொள்வோம். ...எமக்கு அச்சத்தை உண்டு பண்ணுகின்ற உணர்வுகளாக அவை இருக்க முடியும். ஏன் அவ்வாறு ஏற்பட்டது? அதே இரு சாராருள் நான் எந்த இடத்தை எடுக்கின்றேன் என்று நீங்களே உங்களை ஆராய்ந்து பார்த்திருப்பீர்கள். உண்மையான பதில் உங்களுக்குக் கிடைத்ததா? நாம் எமது தனிப்பட்ட பெலயீனங்களை மாத்திரம் கவனத்திற் கொள்வோமேயானால் இறைவன் திருமுன்னிலையில் தோன்றி நிற்பதற்கான தகுதியுடையவர்கள் ஒருவருமே இவ்வுலகில் இருக்க மாட்டார்கள். இருக்கப் போவதுமில்லை. அப்படியானால் இறைவனுடைய தீர்ப்பிடுவதன் அளவுகோல் என்னவாக இருக்க முடியும்? அது எமக்குத் தெரியாது. ஆனாலும் எமக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தது ஒன்றுண்டு. அதாவது, இவ்வுலக வாழ்வின் போது எம்மைப் பற்றிய உலகினைப் பற்றிய இறைவனுடைய கனவினை இனங்கண்டு கொண்டு அந்த கனவு தான் இறை விருப்பமாகும் என்று அறிந்து கொண்டு இவ்வுலகில் எம்மால் இயன்றளவு, எமது அர்ப்பணத்தோடு அதனை நிறைவேற்றுவதற்கு ஆவல் உள்ளவர்களாக இருந்தோமென்பதாகும். நான் எனது கனவுலகில் தனித்துச் சஞ்சரித்தவாறு, எனக்குள்ளேயே சிறைப்பட்டவாறு வாழ்ந்தேனேயாகில் இறைவார்த்தையை கடமைக்காக வேண்டி வாசித்து என் வாழ்வில் சவாலை ஏற்படுத்துவதற்கு அதற்கு இடமளிக்காது போயிருப்பின் உண்மையாகவே எனது வாழ்வின் யதார்த்தத்தை இன்னமுமே காணவில்லை என்பதாகும்.

கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர் நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டும் சார்ந்திருந்தால் எல்லா மக்களையும் விட இரங்குதற்கு உரியவராய் இருப்போம். நாம் ஏமாறாதிருப்போம். ஏமாற வேண்டாமென்று இயேசு எச்சரிக்கை விடுக்கின்றார். உலகம் இன்று அழிந்து விடும், நாளை அழிந்து விடும். அப்போது ஒரு குறிப்பிட்ட தொகையினர் மாத்திரமே எஞ்சியிருப்பர். என்று மக்களை அச்சுறுத்தும், ஏமாற்றும் பல குழுக்கள் காலான்களைப் போல முளைத்துள்ளனர். இற்றைக்கு ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 2000வது ஆண்டில் உலகம் அழிந்து விடுமென்று ஆண்டவர் இவர்களுக்கு கூறினார் என்று உலகம் முழுவதிலும் பறைசாற்றினர். அது நிறைவேறிவிட்டதா? இத்தகைய குழுக்களது வெறும் வார்த்தைகளுக்கு ஏமாறுகின்றவர்கள் பேரில் நாம் அதிகம் அதிகமாக விழிப்புற வேண்டுமல்லவா?

## இரண்டாவது வெளிப்படு

**எங்களைப் போல் ஒழுகுவது எப்படி என்பது உங்களுக்கே தெரியும். ஏனெனில் உங்களிடம் இருந்த போது நாங்கள் சோம்பித் திரியவில்லை.... உங்களுள் சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாகச் சுற்றித் திரிந்து, பிறர் வேலையில் தலையிடுவதாகக் கேள்விப் படுகின்றோம். இத்தகையோர் ஒழுங்காகத் தங்கள் வேலையைச் செய்து தாங்கள் உண்ணும் உணவுக்காக உழைக்க வேண்டும் என ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் கட்டளையிட்டு அறிவுறுத்துகிறோம்.**

## ஒளியில் விழிப்புறுதல்

கிறிஸ்தவர்களாகிய எமக்கு உலக பெறுமதியான வாழ்க்கை, ஆன்மீக ரீதியிலான வாழ்க்கை என்று எமது வாழ்க்கையை இரண்டாகப் பிரித்தமைத்துக் கொண்டு வாழ்வதற்கு முடியாது. நாம் அவ்வாறு பிரித்துக் கொண்டு வாழ்வதற்கு முயற்சித்த போதிலும் இறைவனிடமிருந்து அவற்றைப் பிரித்திட முடியாது. இன்றைய வெளிப்பாடானது அதற்கான தகுந்த உதாரணமாகும். கிறிஸ்துநாதருடைய இரண்டாவது வருகை அண்மித்து விட்டது என்று கருதியவாறு வேறு வேலைகள் எதுவும் செய்யாமல் சோம்பேறிகளாக வாழ்ந்தோர் அன்றைய சங்கங்களில் இருந்தனர். அத்தகையோருக்கான அறிவுறுத்தலாகிறது. இன்றைய வெளிப்பாடு கிறிஸ்துநாதருடைய இரண்டாவது வருகையானது அண்மித்துள்ளது. அதற்காக நாம் ஆயத்தமாவோம். இறையரசிற்காக வேண்டி அர்ப்பணத்துடன் செயற்படுவோம்.

## செபம்

*இறை தகப்பனே, அனைத்து படைப்புக்களையும் பூரணத்திற்குட்படுத்தியவாறு மகிமையலங்காரத்துடன் உலக முடிவில் வருகின்ற உம் திருக்குமாரனை வரவேற்பதற்கு எம் இதயங்களை உகந்தவையாக மாற்றியருளும். அவரது திருவருகையின் போது நாம் மாசற்றவர்களாக இருப்பதற்கு எம்மிடம் ஒப்படைக்கப் பட்ட தூதுரைப் பணியை உமது மகிமைக்காக மாத்திரம் நிறைவேற்றுவதற்கான வல்லமையைத் தந்தருளும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
*கார்த்திகை*
15 திங்கள்

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
1:1-4, 2:1-5

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
1:1-4,6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
18:35-43

புனித
ரோச்,அல்போன்ஸ்,
மறைசாட்சிகள்
நினைவு

## நற்செய்தி நிகழ்ச்சி

இயேசு எரிக்கோவை நெருங்கி வந்த போது பார்வையற்ற ஒருவர் வழியோரமாய் உட்கார்ந்து பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். மக்கள் கூட்டம் கடந்து போய்க் கொண்டிருந்ததைக் கவனித்த அவர் இது என்ன? என்று வினவினார். நாசரேத்து இயேசு போய்க் கொண்டிருக்கிறார் என்று அவருக்குத் தெரிவித்தார்கள். உடனே அவர் இயேசுவே! தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என்று கூக்குரலிட்டார்.. நான் உமக்கு என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர் என்று இயேசு கேட்டார். அதற்கு அவர் ஆண்டவரே நான் பார்வை பெற வேண்டும் என்றார். இயேசு அவரிடம் பார்வை பெறும். உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று என்றார். அவர் உடனே பார்வை பெற்று கடவுளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டே இயேசுவைப் பின்பற்றினார். இதைக் கண்ட மக்கள் யாவரும் கடவுளைப் புகழ்ந்தனர்.

## ஒளியின் விழிப்புறுதல்

துன்புற்று வாழும் மக்களுக்கு விடுதலையை, மீட்பை அளிப்பேன் என்ற இறை வார்த்தையில் மக்கள் நிலைத்திருந்தார்கள். அந்த உறுதிமொழியில் நிலைத்து வாழ்ந்த மக்கள் கூட்டம் அதிகரித்துக் கொண்டே போகின்றது. உறுதி மொழியை நிறைவேற்றும் கடவுள் துன்புறும் மக்களுக்கு அன்பு செய்கின்றார். இறை விருப்பம் நிறைவேறும் இடத்தில் இறையரசு உருவாகின்றது. கிறிஸ்துநாதரின் வருகையோடு அசுத்த ஆவிகளின் ஆட்சிக்காலம் முடிவடைகின்றது. மனமாற்றம் அடைந்தவர்களுக்கு இறையரசின் உரிமையைப் பெற்றுத் தருகின்றார். உமக்கு இணையான வேறு பெயரெதுவுமில்லை எம்மிடையே என்று விசுவாசிக்கின்ற அனைவருக்கும் புகழிடம் நாமே என்று மறை ரகசியத்தை வெளிப்பாடாக்குகின்றார். கண் பார்வையற்ற மனிதன் குருடனாக இருந்தாலும் ஏழாவது கண்பார்வை பிரகாசமாயிருந்தது. கண்பார்வை தெளிவாக இருந்தவர்கள் அறியாத மறை இரகசியத்தை இவர் அறிந்திருந்தார். குருடனாக வாழ்வைக் கழித்தாலும் தூய ஆவியானவருக்கு இடமளித்து செயலாற்றினார். உண்மையும் வழியும் உயிரும் ஆண்டவராகிய கிறிஸ்துநாதரே என்பதை அவருக்கு தூய ஆவியானவர் வழிகாட்டினார்.

## எம்பேரில்

இயேசு ஆண்டவர் எமது வாழ்வில் ஒரே ஆண்டவராக ஏற்றுக் கொண்டு அவருக்கு முதலிடம் கொடுத்து வாழ வேண்டும். அதற்காக வேண்டி ஏழாவது கண் எமக்கு தந்தருளுமாறு இடைவிடாது மன்றாட வேண்டும். ஆண்டவரைச் சந்திப்பதின் அனுபவத்தை உரிமையாக்கக் கொள்வதற்குத் தடையாக இருக்கின்ற தலையான பாவங்கள் உள்மனக் காயங்கள் என்பவற்றை இனங்கண்டு கொள்வதற்கான ஒளியைத் தந்தருளுமாறு வேண்டுவோம். ஆண்டவரது திருக்குருதியினால் எம்மைக் கழுவி புனிதப்படுத்துவதற்கு இடமளித்தவாறு செபிப்போம்.

## செபம்

அப்பா தந்தையே! கண் பார்வையற்று இருளில் வாழ்ந்த மகன் உமது ஒளியைப் பெற்று, ஒளியின் மகனாக மாறிய நற்செய்திக்காக நன்றி கூறுகின்றோம். இறையாட்சி உன் அருகில் வந்துள்ளது. மனம் மாறி நற்செய்தியை நம்பு. மனம் மாறிட அனைவருக்கும் வரம் அருளும் ஆண்டவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

கார்த்திகை
16 செவ்வாய்

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
3 : 1-6, 14-22

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
15 : 2- 5

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
19: 1 - 10

புனித மார்க்ரெத்,
புனித கெர்ட்ருத்
நினைவு

### முதல் வெளிப்பாடு

உன் செயல்களை நான் அறிவேன் நீ குளிர்ச்சியாகவும் இல்லை சூடாகவும் இல்லை..... ஆனால் நீ இரங்கத்தக்க, வறிய பார்வையற்ற, ஆடையற்ற நிலையில் இருக்கிறாய் என்பது உனக்குத் தெரியாது. இதோ நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருககிறேன்.... அவர்களோடு உணவு அருந்துவேன். அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்....

### பரி. நற்செய்தியிலிருந்து

*இயேசு நகர் வழியே சென்று கொண்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்காக சக்கேயு என்ற வரிதண்டுபவரின் தலைவன் ஆவலோடு மரத்தில் ஏறிக் கொண்டார்.... ஆண்டவரே என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்துவிடுகிறேன். எதையாவது நான் கவர்ந்திருந்தால் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்று கூறினார். இயேசு அவரை நோக்கி இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று. இழந்து போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார் என்று சொன்னர்.*

### ஒளியில் விழிப்புறுதல்

வாரும் படைப்பாளராம் ஆவியே, வந்து என்னுடைய மனதை சந்தித்து உம்முடைய அருள்வரங்களினால் என்னை நிரப்பி இயேசுவின் உள்ளரங்கத்தினை அறிந்து கொள்வதற்கு என்னை வழிநடத்தியருளும். இன்றைய நாளுக்கான முதல் வெளிப்பாடு, பரி நற்செய்தி இவை இரண்டிலும் உள்ள இறைவார்த்தைகள் எனக்கு ஆறுதல் தருபவையாகின. அன்பானவரான இயேசு எங்கள் ஒவ்வொருவரின் உண்மையான மனமாற்றத்தை எதிர்பார்க்கன்றார். அவர் இந்த உலகிற்கு வந்ததன் நோக்கமும் அதுதான். நாம் அனைவரும் பாவிகள். அன்றாடம் வீழ்ந்து விடும் சம்பவங்கள் ஏற்படுகின்றன. வீழ்ந்து கிடக்கக் கூடாது என்று அவர்கள் காட்டினார்கள். இன்றைய முதல் வெளிப்பாட்டில் நீ குளிர்ச்சியாகவோ சூடாகவோ இல்லை. இவை இரண்டும் இல்லாமல் வெதுவெதுப்பாக இருப்பதனால் வாயிலிருந்து உன்னை கக்கி விடுவேன் என்றார். வெதுவெதுப்பான நிலை என்பது இறைவனை மறந்து மமதைகொண்டு நீதி, நேர்மையற்ற நிலையில் வாழ்கின்ற போது எனக்கு என்ன குறை. செல்வம் இருக்கு வல்லமை இருக்கிறது. எனக்கு ஒரு குறையும் இல்லை என்று நாம் செருக்கோடு வாழ்கின்ற வேளையில் ஆண்டவர் கூறுகின்ற இறைவார்த்தையில் உள்ளம் சுக்கு நூறாக நொறுங்குகின்றது. இவை எல்லாம் இருக்கும் எனக்கு என்ன குறை, ஆனால் ஆண்டவரின் பார்வையில் இழிந்த, இரங்கத்தக்க, பார்வையற்ற, ஆடையற்ற நிலையில் இருக்கிறோம். இப்படிப்பட்டவர்களின் நிலையைக் கண்டு எம் பெருமான் வேதனைப்படுகிறார். கதவு அருகில் நின்று தட்டுகின்றார். அவர் வந்து எம்மோடு தங்குவதற்கு இடமளிப் போம். இப்படியான அன்பான வார்த்தைகள் மனிதரிடம் கிடைக்குமா? சிந்திப்போம்.

### செபம்

அப்பா பிதாவே, தூயதோர் உள்ளத்தை தாரும். உம்முடைய அன்பு எத்துணை ஆழமானது. சிறப்பு மிக்கது என்று நாங்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்க வரம் தாரும். இப்பொது இருக்கின்ற காலக்கட்டத்தில் உம்மில் நிலைத்திருக்க உம்முடைய வருகைக்காக ஆவலோடு காத்திருக்க வல்லமையுள்ள தூய ஆவியால் நித்தம் நித்தம் எங்களை நிரப்பியருளும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

கார்த்திகை
17 புதன்

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
4 : 1 - 11

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
150 : 1 - 6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
19: 11 - 28

புனித எலிசபேத்

### பரி.நற்செய்தியிலிருந்து

இயேசு எருசலேமை நெருங்கி வந்து கொண்டிருந்தார். அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் இறையாட்சி உடனடியாகத் தோன்றப் போகிறது என்று நினைத்தார்கள். அப்போது இயேசு மேலும் ஓர் உவமையைச் சொன்னார். உயர் குடிமகன் ஒருவர் ஆட்சியுரிமை பெற்று வரத் தொலை நாட்டிற்குப் போகப் புறப்பட்டார். அப்போது அவர் தம் பணியாளர்கள் பத்துப் பேரை அழைத்து பத்து மினாக்களை அவரிகளிடம் கொடுத்து அவர்களை நோக்கி நான் வரும் வரை இவற்றை வைத்து வணிகம் செய்யுங்கள் என்று சொன்னார். அவருடைய குடிமக்களோ அவரை வெறுத்தனர். எனவே இவர் அரசராக இருப்பது எங்களுக்கு விருப்பமில்லை என்று சொல்லி தூது அனுப்பினர்.

(மிகுதியை தியான நிலையில் வாசிக்கவும்)

### ஒளியின் விழிப்புறுதல்

அன்பான இறை தந்தை தனது கருவூலத்திலிருந்து அனைத்தையும் உய்த்துணரும் சக்தியை சகல மனிதருக்கும் தந்துள்ளார். எங்களுக்கு அளித்திருக்கும் உயிர் உடல் ஆன்மா, சிந்தனை சொல் செயல் உணர்வுகள், உறவுகள் அனைத்தும் அவருடையவை.

இறைவன் அளித்திருக்கும் வரப்பிரசாதங்களை வளர்ச்சியுறச் செய்து பல்கிப் பெருகச் செய்வதே இறைவனுடைய திருவுளமாக இருக்கின்றது. இதனை உய்த்துணராதவர்கள் இறை திட்டத்திற்கு முரணாகி, சதா கால வாழ்வை இழக்கின்றார்கள். இறை வரப்பிரசாதங்களைப் பகிர்ந்து கொள்பவர்கள் இறை மகிமையின் பங்காளர்களாகின்றனர்.

### எம்மில் விழிப்புறுதல்

இயேசுவின் வார்த்தையின் படியே சிறிய சிறிய காரியங்களில் மனத்தாழ்மையுடனும் பொறுமை யுடனும் ஒருவரை ஒருவர் ஏற்று, அன்பு செய்து, மதித்து, மன்னித்து வாழ வரம் வேண்டுவோம். ஆவியானவரின் வழிகாட்டுதலில் பிறருக்கு ஒளியாக, வழியாக, உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து ஒன்றுக்கு பத்து மினாக்களை இறைவனுக்கு சம்பாதித்துக் கொடுக்கும், இறை அரசைக் கட்டி எழுப்பும் நல்ல பணியாளராக எம் வாழ்க்கையூடாகச் சாட்சியம் பகர்வோம்.

### செபம்

அப்பா தந்தாய்!

மறைபொருளான உம் திருத்திட்டத்திற் கேற்ப எம் வாழ்வினை வளர்ச்சியுறச் செய்ய எம்மை வழிநடத்தியருளும். நாம் பெற்றுக் கொண்ட கொடைகளுக்கேற்ப வார்த்தைகளுக்கேற்ப பலன் கொடுக்கும் விழிப்புணர்வைத் தாரும். எம் உடல், உளம், ஆன்மாவை உம்மிடம் கையளிக்கின்றோம். உம் திரு நாமம் பரிசுத்தப்படுவதாக!

(தி. பா. 150 : 2 , 3, 6)

*அவர் தம் வல்ல செயல்களுக்காய்*
*அவரைப் போற்றுங்கள்!*
*அவர் தம் எல்லாயிலா மாண்பினைக்*
*குறித்து, அவரைப் போற்றுங்கள்!*
*அனைத்து உயிர்களே,*
*ஆண்டவரைப் புகழ்ந்திடுக!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
18 வியாழன்

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
5 :1-10
பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
49: 1-6,9
நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
19:41-44
**அல்லது**
தி.பணி
28:11-16, 30-31,
தி.பா 98:1-6,
புனித மத்தேயு
14:22-33
திரு.தூதர்களான
பேதுரு, பவுல்
பேராலயங்களின்
நேர்ந்தளிப்பு

**பரி.நற்செய்தியிலிருந்து**

இயேசு எருசலேம் நகரை நெருங்கி வந்ததும் அதைப் பார்த்து அழுதார். இந்த நாளிலாவது அமைதிக் குரிய வழியை நீ அறிந்திருக்கக் கூடாதா? ஆனால் இப்போது அது உன் கண்களுக்கு மறைக்கப் பட்டுள்ளது. ஒரு காலம் வரும், அப்பொழுது உன் பகைவர்கள் உன்னைச் சுற்றி அரண் எழுப்பி உன்னை முற்றுகையிடு வார்கள். உன்னையும் உன்னிடத்தி லுள்ள உன் மக்களையும் எப்பக்கத் திலுமிருந்து நெருக்கி அழித்து தரைமட்டமாக்கு வார்கள். மேலும் உன் னிடம் கற்கள் ஒன்றின் மீது ஒன்று இராதபடி செய்வார்கள். ஏனெனில் கடவுள் உன்னைத் தேடி வந்த காலத்தை நீ அறிந்து கொள்ளவில்லை என்றார்.

**ஒளியில் விழிப்புறுதல்**

வாரும் ஆவியானவரே வாரும். இன்றைய நற்செய்தியின் அர்த்தத்தினைப் புரிந்து, அதனை எழுத்து வடிவமாக்கிட எனக்கு உதவி புரிந்தருளும்.

இறை கட்டளைக்கு அடிபணியாமல் தன் மனம் போன போக்கில் வாழ்ந்து பாவத்தில் அமிழ்ந்து கொண்டிருக்கும் எருசலேமை காணும் இயேசுவின் உள்ளாந்தரம் படும் வேதனையை இன்றைய நற்செய்தி வெளிப்படுத்துகின்றது. அமைதிக்குரிய வழியை அறிந்து கொள்ளாமல், எவ்வேளையிலும் சண்டை சச்சரவு, கோப தாபங்கள், சிறிய பிரச்சினைகளில் கூட பொறுமையிழந்து அல்லலப்படும் மக்கள், கண்கள் மறைக்கப்பட்ட கண் தெரியாத குருடர்களைப் போன்றவர்கள் என்று கூறுகிறார். உயிருள்ள இறைவன் மனுவுருவெடுத்து அவர்களைத் தேடி வந்தாலும், இறைமகனை அவர்கள் அறிந்து கொள்ளவில்லையே என்று மனம் குமுறுகிறார்.

**எமது பக்கம்**

இயேசு பிரானின் கால கட்டத்தில் அவர் தன் வாழ்வாலும் வார்த்தையாலும் இறை விருப்பத்தை வாழ்ந்து காட்டினார். நிலையில்லா இவ்வுலக வாழ்வு நிலையான மறு உலக வாழ்வை நோக்கிய பயணம் என்பதனை அவர் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். ஆனால் மனிதர்கள் அதனை அறிந்து கொள்ளவில்லை. அதன் காரணமாக அவர்களது நிலைக்காக மனம் வருந்துகிறார். ஒருவிதத்தில் நோக்குகையில் அம்மனிதர்களது நடத்தையானது வல்லமையாளராம் ஆவியானவரை பெற்றிராத காரணத்தினால் அவ்வாறு அமைந்திருக்கலாம். அநேகமாக அவர்கள் அவரது குணப்படுத்தலிலும் புதுமைகளிலும் ஈர்க்கப்பட்டு அவர் பின்னே தங்கள் சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அலைந்திருக்கலாம். ஆனால் எமது நிலை என்ன? தூய ஆவியானவர் குடிகொள்ளும் ஆலயமாகிய என் வாழ்க்கை ஒளிமயமாகி இருக் கின்றதா? அவ்வல்ல ஆவியைப் பெற்ற நாம் நடந்து கொள்ளும் முறை என்ன? ஆண்டவர் எம்மைத் தேடி வந்து விசேட அழைப்பைக் கொடுத் -துள்ளார். அதற்கு விழிப்புற்றுப் பதிலளிப்போம்.

**செபம்**

அன்பின் தேவனே இறைவா! உமது வல்லமையுள்ள ஆவியைத தந்து எம்மை வழிநடத்துகின்ற உமது அளவிட முடியாத அன்பை உணர்ந்து, அதற்கு பிரதியுபகாரமாக உமக்குகந்த பிள்ளைகளாக வாழ்ந்து, மற்றவர்களும் உம்மை அறிந்து கொள்ள எம்மாலான சேவையை செய்திட எமக்கு வரமருளும் ஆமென்.

***பரிசுத்த திருச்சபைக்காகவும் தலைமைப் பீடம் வகிக்கின்ற அனைவருக்காகவும் செபிப்போம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை"

2010 ஆவணி 18
புதன்

முதலாம் வெளிப்பாடு
எசேக்கியல்
34:1-11

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
23:1-6

நற்செய்தி வெளிப்பாடு
புனித மத்தேயு
20:1-16

பரி. நற் செய்தி நிகழ்ச்சி

"விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். நிலக்கிழார் ஒருவர் தம் வேலையாளர்களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்றார்.......... அப்போது முதலில் வந்தவர்கள் தங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களும் ஒரு தெனாரியம் வீதம்தான் பெற்றார்கள். அவர்கள் அதைப்பெற்றுக் கொண்டபோது அந்த நிலக்கிழார்க்கு எதிராக முணுமுணுத்து, "கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணிநேரமே வேலை செய்தார்கள். பகல் முழுவதும் வேலைப்பளுவை யும் கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கி விட்டீரே' என்றார்கள். அவரோ அவர்களுள் ஒருவரைப் பார்த்து, "தோழரே, நான் உமக்கு அநியாயம் செய்யவில்லை. நீர் என்னிடம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக்கொள்ளவில்லையா? உமக்கு உரியதைப் பெற்றுக் கொண்டு போய்விடும். உமக்கு கொடுத்தபடியே கடைசியில் வந்த இருவருக்கும் கொடுப்பது என் விருப்பம். எனக்குரியதை நான் என் விருப்பபடி கொடுக்கக் கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உமக்கு பொறாமையா?" என்றார். "இவ்வாறு கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவர்" என்று இயேசு கூறினார்.

ஒளியில் விழிப்புறுதல்

மத்தேயு நற்செய்தியில் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள இவ்வுவமையினூடாக இறைவனின் நன்மையும், தியாகமான வாழ்வை வெளிப்படுத்தும் போது சுதந்திரத்துடன் செயற்படுவதையும் காணமுடியும். விபசார பெண்ணுக்கு மன்னப்பளிப்பது போன்ற நிகழ்ச்சியும், சிலுவை மரத்தில் தனது வலப்பக்கத்திலிருந்த கள்வனுக்கு மன்னிப்பளித்தல் போன்ற நிகழ்ச்சியும் இறைவனின் நன்மைத் தனத்தையும், தியாக வாழ்வையும், தெளிவாக்குகின்றது. அதை சுதந்திரத்துடன் செய்வதும் தெளிவாகின்றது.

எம்பேரில்

நான் எனது சங்கத்தில் இறைவனைப் போல் சுதந்திரத்துடன் செயற்படுகின்றேனா? எனக்கு என் சங்கம், எனக்கு விருப்பமான, நான் சொல்வதைச் செய்கின்ற ஒரு குழுவைக் கட்டியெழுப்பியுள்ளேனா? அனைவரையும் ஒரே விதமான பராமரிக்க என்னால் முடியுமா? நானும் ஒரு பரிசேயரா? வெளிப்படையாக மாத்திரம் தான் அனைவரோடும் ஒற்றுமையாகின்றேனா? இல்லாவிட்டால் முதலாம் வாசகத்தில் கூறுவதைப் போல் செயற்படுகின்றேனா?

முதலாம் வெளிப்பாடு

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. மானிடா இஸ்ரயேலர்களின் ஆயர்களுக்கு எதிராக இறைவாக்குரை. அவர்களுக்கு இறைவாக்குரைத்துச் சொல். தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே. தாங்களே மேய்ந்துக் கொள்ளும் இஸ்ராயேலின் ஆயர்களுக்கு ஐயோ கேடு! ஆயர்கள் மந்தையை அன்றோ மேய்க்க வேண்டும்! நீங்கள் கொழுப்பானதை உண்டு ஆட்டு மயிராடையை உடுத்தி மந்தையில் சிறந்ததை அடிக்கிறீர்கள். மந்தையையோ மேய்ப்பதில்லை. நீங்கள் நலிந்தவற்றைத் திடப்படுத்தவில்லை. பிணியுற்றவற்றிற்கு குணமளிக்கவில்லை. காயமுற்றவற்றிற்கு கட்டுப் போடவில்லை. வழித் தப்பியவற்றை திரும்பக் கூட்டி வரவில்லை. காணமற் போனவற்றைத் தேடவில்லை. ஆனால் அவற்றை கொடுமையுடனும், வன்முறையுடனும் நடத்தினீர்கள். ஆயன் இல்லாமையால் அவை அழைந்து திரிந்தன. எல்லா காட்டு விலங்குகளுக்கும் அவை இரையாகின.... (34:6-11 வாசிக்கவும்)

செபம்.

இறைவா! உம்மைப் போல் என்னால் செயற்பட முடியவில்லை. பரிசுத்த ஆவியானவரை எனக்கு அனுப்பியருளும். என்னுள் மனுவுருவாகியருளும். அப்பொழுது உமது விருப்பத்தை நிறைவேற்ற என்னால் முடியும்.
ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

கார்த்திகை
20 சனி

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
11: 4-12

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
144 : 1-2,9 -10

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
20 : 27 - 40

**பரி.நற்செய்தியிலிருந்து**

உயிர்த்தெழுதலை மறுக்கும் சிலர் சதுசேயர் இயேசுவை அணுகி! போதகரே, மணமான ஒருவர் மகப்பேறின்றி இறந்து போனால் அவர் மனைவியை கொழுந்தனே மனைவியாக ஏற்று கொண்டு தம் சகோதருக்கு வழிமரபு உருவாக்க வேண்டும் என்று மோசே எழுதி வைத்துள்ளார். இங்கு சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவர் ஒருவர் பெண்ணை....... அதற்கு இயேசு அவர்களிடம் இக்கால வாழ்வில் மக்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆனால் வருங்கால வாழ் வைப் பெறத் தகுதி பெற்ற யாரும் இறந்து உயிர்தெழும் போது திருமணம் செய்து கொள்வதில்லை. இனி அவர்கள் சாக முடியாது. அவர்கள் வானதூதரைப் போல் இருப்பார்கள். உயிர்த் தெழுந்த மக்களாய் இருப்பதால் அவர்கள் கடவுளின் மக்களே. இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவதைப் பற்றி மோசே முற்புதர் பற்றிய பகுதியில் எடுத்துக் கூறியிருக்கிறாரே அங்கு அவர் ஆண்டவரை ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என்று கூறுகின்றார். அவர் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக வாழ்வோரின் கடவுள் ஏனெனில் அவரைப் பொறுத்த மட்டில் அனைவரும் உயிருள்ளவர்களே என்றார். மறைநூல் அறிஞருள் சிலர் அவரைப் பார்த்து போதகரே நன்றாகச் சொன்னீர் என்றனர். அதன் பின் அவர்கள் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

**ஒளியின் விழிப்புறுதல்**

இன்றைய வாசகத்தை தியானிக்கும்போது சதுசேயர் கேட்கும் கேள்விக்கு இறுதியாக இயேசு நல்ல பதில் ஒன்று கூறுகின்றார். அவர் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக வாழ்வோரின் கடவுள். சதுசேயர் உயிருடன் இருந்தாலும் உயிர் அற்றவர்கள் போல வாழ்ந்தார்கள்.

இயேசு இவர்களைப் பார்த்து நிச்சயமாக வேதனை அடைந்திருப்பார். இயேசு நடக்க போகிறதை சொன்னார். சொன்னதை செய்தார். இருந்தும் பரிசேயர் சதுசேயர் இயேசுவை மதிக்க வில்லை. அவருடைய வார்த்தைக்கு எவ்வளவு வல்லமை இருந்தும்; கண்டும் காணாதவர்கள் போல் வாழ்ந்தார்கள். இயேசுவின் உயிர் உள்ள வார்த்தையை ஏனோ தானோ என்று ஏற்று வாழ்பவர் மத்தியில் அவரது வல்லமை வெளிப்படாது.

**எம்பேரில்**

**உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை** என்று கூறிய மகனானவரை நோக்குவோம். அவர் இறந்தோரின் கடவுள் அல்ல. மாறாக வாழ்வோரின் கடவுள் என்பதை மகிழ்வோடு ஏற்றுக்கொள்வோம். ஏற்றுக்கொள்வதை மாத்திரம் அல்ல வாழ்விலும் வார்த்தைகளின் ஊடாக நாள்தோறும் வாழ்வதற்கு தூய ஆவியானவரின் வல்லமையை கேட்டு செபிப்போம். நாம் ஆண்டவரோடு பயணத்தை ஆரம்பிப்போம். இறை விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்படுகின்ற தடைகளை இனம் கண்டுகொள்வோம். இறை விருப்பத்திற்கு அடி பணிவோம். எனது மணித்தியால செபத்தின் வழியாக இறை தந்தையின் குரலொலியைக் கேட்டு எம் புகழ்ச்சிக் கிராமத்தை கட்டி எழுப்புவோம்.

**செபம்**

அப்பா தந்தையே! இவ்வுலக வாழ்வில் உமது விருப்பத்தை நிறை வேற்றும் மக்களாக வாழ எம்மை வழிநடத்தியருளும் ஆமென்.

*என் கற்பாறையும் கோட்டையும் அவரே!*
*என் கேடயமும் புகலிடமும் அவரே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
21 ஞாயிறு

முதலாம்வெளிப்பாடு
2சாமுவேல்
5:1-3

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
122 : 1-5

இரண்டாம்வெளிப்பாடு
கொலோசியர்
1: 12 - 20

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
23: 35 - 43
கிறிஸ்து அரசர்
பெருவிழா
பொ. கா. இறுதி
வாரம்

இன்றைய நாளில் திருச்சபைத் தாயாளவள் கிறிஸ்து அரசர் பெரு விழாவைக் கொண்டிருக் கின்றார். அவரது அரசின் தன்மை உலகோர் கருது-கின்ற அரசின் தன்மையா-காது. அது முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். முதல் வெளிப்பாட்டில் வெளிப்பாடாகின்ற தாவீத-ரசின் திருப்பொழிவானது கிறிஸ்து அரசரது திருப்-பொழிவிற்கான முன்ன - டையாளமாக அமைகின்-றது. இரண்டாவது வெளி-ப்பாடானது உயிர்த்த ஆண்டவரின் இவ்வுலக அரசுத் தன்மையை விளக்குகின்றது. இன்-றைய பரிசுத்த நற்செய்தி வெளிப்பாடானது சிலு-வையில் அறையுண்-டிருந்த இயேசு கிறிஸ்து நாதரின் மேன்மையை எடுத்தியம்புகின்றது. திருவழிபாட்டுக் காலத்தின் இறுதி ஞாயிறு தினத்தை கிறிஸ்து அரசர் பெருவிழாவிற்காக வேண்டி ஒதுக்கி வைத்திருப்பதன் வழியாக, உலக முடிவில் கிறிஸ்துவே அரசராக ஆளுமையை ஏற்றுக்கொள்வார் என்பதை நினைவு கூருவதாக அமைகின்றது போலும்.

### முதலாவது வெளிப்பாடு

இஸ்ரயேலின் அனைத்துக் குலங்களும் எபிரோனுக்கு வந்து தாவீதிடம் கூறியது, நாங்கள் உம் எலும்பும், சதையுமானவர்கள்...... நீரே இஸ்ரயேலை நடத்திச் சென்றவர். நீயே என் மக்கள் இஸ்ரயேலின் ஆயனாய் இருப்பாய். நீயே இஸ்ரயேலுக்குத் தலைமை தாங்குவாய் என்று உமக்கே ஆண்டவர் கூறினார். இஸ்ரயேலின் பெரியார்கள் எல்லாரும் அரசரைக் காண எபிரோனுக்கு வந்தனர்... இஸ்ரயேலின் அரசராக அவர்கள் தாவீதைத் திருப்பொழிவு செய்தனர்.

### பரிசுத்த நற்செய்தியிலிருந்து

*....படைவீரர்.... "நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்" என்று எள்ளி நகையாடினர். இவன் யூதரின் அரசன் என்று அவரது சிலுவையின் மேல் எழுதி வைக்கப்பட்டிருந்தது. சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன் நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால், மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு.... இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்றுவரும் போது என்னை நினைவிற் கொள்ளும் என்றான். அதற்கு இயேசு அவனிடம் நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக எமக்குச் சொல்கிறேன் என்றார்.*

### ஒளியின் விழிப்புறுதல்

பல அற்புதங்களையும், குணப்படுத்தல்களையும் செய்த இயேசு கிறிஸ்து நாதரை யூதர்க-ளது அரசனாக ஏற்றுக்கொள்வ-தற்குத் தயாராக இருந்த யூத மக்க-ளுக்கு, சிலுவையில் அனாதரவான நிலையில் மூன்று ஆணிகளில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவை அவர்களது அரசனாக ஏற்றுக்கொள்வதற்கு முடியாது போனது. ஆயினும் வலது பக்கத்துக் கள்வனுக்கும், நூற்றுவர் தலைவனுக்கும் இயேசுவைப் புதிய-தோர் ஒளியுடன் பார்ப்பதற்கான அருள் கிடைக்கப் பெற்றிருந்தது. அவரது அரசுரிமையானது உலகோர் எதிர்பார்க்கும் அரசுரிமையாகாது. நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என்ற இயேசுவினது வார்த்-தைகளுள் அவரது அரசுரிமை பற்றிய குறிப்புணர்வொன்று இருக்கிறது. அவர் தமது அரசு-ரிமையைப் பற்றி நன்கறிந்திருந்-ததோடு இன்றே அங்கே செல்வார் என்ற உறுதிப்பாடும் இருந்தது. இறைமகன் என்ற விதத்தில் தந்தையிடம் நம்மை முழுமையாக ஒப்படைத்திருந்த அவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்களிக்கப் போகும் அரசுரிமைபேரிலான நம்பிக்கை அணுவளவேனும் குறைந்து விடவில்லை.

முதலாவது வெளிப்பாட்டில் தாவீது இஸ்ரயேல் குலத்தினதும் அரசனாக திருப்பொழிவு செய்யப்பட்டார் என்பது இறைவனால் அவருக்குக் கிடைக்கப்பெற்ற அழைப்பாகும். தாவீது அரசனானவர் இஸ்ரயேலின் முன்மாதிரிகையான அரச-னாவார். அவரைப் போன்றதொரு அரசனா-வதை ஏனையவர்களும் ஆசித்தனர். எதுவிதமான களங்கமுமில்லாமல் தமது தூதுரைப் பணியை நிறைவேற்றிய இறைமகனாம் இயேசு இவர்களிலும் அதி உத்தமராக இருக்கின்றார்.

அவரைப் பற்றி வர்ணிப்பதற்கான தகுதி பெலயீனமான எம்மில் ஒருவருக்-குமே இராது. அவரது ஆட்சியுரிமையின் வழியாக தோற்கடிக்கப்படுவது தீயவ-னாகும். அவர் தமது அதிகாரத்தை உதவி-யாக்கிக் கொண்டு தீயவனைத் துரத்தி-யடித்த சம்பவங்கள் பலவற்றை பரிசுத்த வேதாகமத்தில் காணக்கூடியதாக இருக்-கின்றது. அவரது விந்தை மிகுந்த வாழ்க்கை முறையே எம்மை அவர்பால் ஈர்த்தெடுக்கின்றது. அவருள் இருந்த ஆணையிலிருந்த அதிகாரத்தை இறைவ-னுடைய மகன், மகள் என்ற ரீதியில் எந்தளவு பிரயோசனத்திற்கு எடுத்துள்ளேன். தீயவனது சோதனைகள் வரும்போது அதே அதிகாரத்தை உபயோகித்து, வெற்றி பெறு-வதற்கான வல்லமை எனக்கும் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அது பற்றிய விழிப்புறுதல் என்னுள் இல்லாதது குறித்து இன்றைய நாளில் மகா உன்னதரிடம் மன்னிப்புக் கேட்போம். மன்னிப்புப் பெறுவோம்.

*மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகிறேன். விண்ணையும், மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்*

## இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.... அவரே இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுவித்துக் தம் அன்பார்ந்த மகனின் ஆட்சிக் குட்படுத்தினார். அம் மகனால் தான் நாம் பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெறுகிறோம். அவர் கட்புலனாகாத கடவுளின் சாயல். படைப்பனைத்திலும் தலைப்பேறு. ஏனெனில் விண்ணி லுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர் அதிகாரம் கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர்.... சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால்... அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்.

## ஒளியில் விழிப்புறுதல்

இருள் அரக்கனின் பிடியிலிருந்து எம் அனைவரையும் மீட்டெடுத்த இறைமகன் இயேசு ஆவார். அதையன்றி வேறு எதுவுமே எமக்கிருக்க முடியாது. அனைத்தும் அவர் காரணமாக உண்டாக்கப் பட்டுள்ளன. மரணத்தைத் தோற்கடித்து உயிர்த்தெழுந்தவரும் அவரேயாவார். அவரது வாழ்க்கை முறைகள் அனைத்துமே எமக்கு வழிகாட்டு-வனவாகும். படைப்புக்கள் அனைத்-திலும் அவரது வீற்றிருத்தலைக் காண்பதற்கு ஆவியானவரது அருள் எமக்கு அத்தியாவசியமானதாகும். ஆவியானவரது ஒளியுடன் காணுகின்ற அனைத்தினுள்ளும் உயிர்த்தெழுந்த ஆண்டவரை அனுபவிப்பதற்கு முடியுமாகும். அத்தகைய ஒளியை வேண்டி இறைஞ்சுவோம். இறைஞ்சுகின்ற அளவுக்கு அந்த ஒளி கிடைக்கும்.

## செபம்

இயேசுவே! மன்னாதி மன்னரே, உமது அரச, குருத்துவ, இறைவாக்கின் படைக்கலங் களினால் அலங்கரித்தருளும். எமது வாழ்க்கை வழி உமது அரசினை வெளிப்படுத்துவதற்குத் தேவையான வல்லமையை ஆவியானவர் வழியாகப் பெறுவதற்கான விழிப்புறுதலைத் தந்தருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
22 திங்கள்

முதலாம்வெளியாடு
திருவெளிப்பாடு
14 : 1 - 5

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
24 : 1 - 6

நற்செய்திவெளியாடு
புனித லூக்கா
21: 1 - 4

புனித
செசிலியா
நினைவு

## பரி.நற்செய்தியிலிருந்து

***இயேசு நிமிர்ந்து பார்த்த பொழுது செல்வர்கள் தங்கள் காணிக்கைகளைக் காணிக்கைப் பெட்டிக்குள் போடுவதைக் கண்டார். வறுமையில் வாடிய ஒருகைம்பெண்ணும் இரண்டு காசுகளை அதில் போடுவதைக் கண்டார். அவர் இந்த ஏழைக் கைம்பெண் எல்லாரையும் விட மிகுதியான செல்வத்திலிருந்து காணிக்கை போட்டனர். இவரோ தமக்கும் பற்றாக்குறை இருந்தும் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார் என்றார்.***

## ஒளியின் விழிப்பு

தந்தாய் உம் உதவியை நாம் பெறாவிடில், கிறிஸ்து உள விருப்பை அடைவது எப்படி! பல வகை வரம் உண்டு. உம் கைகளில் உம் உன்னத வரத்தால் மக்களை வழிநடத்தும்.

ஆலயத்தில் மக்கள் காணிக்கை செலுத்துவதை இயேசு மிகவும் அவதானத்துடன் பார்க்கிறார். செல்வர்களும் ஏழைகளும் காணிக்கை செலுத்துகன்றனர். செல்வர்களோ தமது செலவுகளின் பின் மிகுதியானதில் ஒரு பகுதியை காணிக்கையாகச் செலுத்தினர். இவர்கள் செலுத்திய காணிக்கை இவர்கள் நாளாந்த வாழ்வை தாக்கப் போவதில்லை. அதிகமானதின் சிறுபகுதியே இதுவாக இருந்தது. இதனைக் காணிக்கையாக செலுத்தும்பொழுது அதைக் கண்டவர்களோ தங்களைப் பாராட்டுவார்கள் பெருமையாக் கதைப்பார்கள் என்ற தன்னலம் பெருமை அவர்கள் மனதில் உதித்தது.

ஏழைக் கைம்பெண் தன் குறைகளுடன் அன்றாட உழைப்பில் வாழ்ந்தவள். தனது பிழைப்புக்காக தன்னிடமிருந்த எல்லாவற்றையும் ஆண்டவருக்குக் காணிக்கையாகச் செலுத்தனாள். அவளிடம் மிகுதியாக ஒன்றும் இல்லை. இறைவன் அன்பில் நம்பிக்கை மட்டுமே இருந்தது. இயேசு இக் கைம்பெண்ணின் காணிக்கையைப் பாராட்டுகின்றார். தொகையோ சிறியது. ஆனால் உள்ளமொ நிறைவு பெற்ற-தாக இருந்தது. *உன்னத அன்புகள் நான்கினையும் உணவாக்கிக் கொள்ள எம்மை இயேசு அழைக்கின்றார். விழிப்புறுவோம்!*

## எம்பேரில்

தன்னிடமிருந்த சகல சம்பவத்தையும் இறைவன் பாதம் சமர்ப்பித்து அவரில் தங்கிவாழ விசுவாசக் கண்களை அவர் பக்கம் திருப்பிய ஏழைக் கைம்பெண் உள்ளம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கும். இறைவன் என் அப்பா! அம்மா! அவர் என் தந்தை. அவரே என் வாழ்வின் பாதுகாவல். அவரே என்னை வழிநடத்துபவர். அவரால் எல்லாம் ஆகும். தந்தையின் அரவணைப்பிற்கு உள்ளாகின்றாள். நாமும் இன்று காணிக்கை செலுத்துகின்றோம். எம் மனநிலை எவ்வாறானது அளந்து. நிறுத்து, எண்ணி, சிந்தித்து... போடுபவர்கள்? இறைவன் எனக்குத் தந்த ஒவ்வொரு கொடைகளைப் பற்றி சற்று விழிப்புறுவோம். இறைவிருப்பம் நிறைவேற்ற நாம் ஒற்றுமையாக வேண்டும். நம்மிடம் உள்ளதை பகிர்ந்தளிக்க வேண்டும். உலக ஆசைகளிலிருந்து விலகி இறை அன்பிற்கு உள்ளாக வரம் வேண்டுவோம்.

## செபத்திற்குள்ளாதல்

***நிலை வாழ்வைப் பெற்றுக் கொள்ள நான் எவ்வாறு வாழ வேண்டும் என எனக்குக் கற்பித்த இறைவா, உம் தூய ஆவியின் கொடைகளாலும் கனிகளாலும் என்னை நிரப்பி, சகல சவால்களுக்கும் எதிர்த்துப் போராடி உம்மில் பிரமாணிக்கமுள்ள மகனாக, மகளாக வாழ வரம் தாரும் ஆமென்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
23 செவ்வாய்

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
14 : 14 - 20

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
96 : 10 - 13

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
21 :5 - 11

**பரி.நற்செய்தியிலிருந்து**

*கோவிலைப் பற்றி சிலர் பேசிக் கொண்டிருந்தனர். கவின் மிகு கற்களாலும் நேர்ச்சைப் பொருள் களாலும் கோவில் அழகு படுத்தப்பட்டிருக்கிறது என்று சிலர் பேசிக் கொண்டிருந்தனர். இயேசு இவற்றையெல்லாம் பார்க்கிறீர்கள் அல்லவா? ஒரு காலம் வரும், அப்போது கற்கள் ஒன்றின் மேல் ஒன்று இராதபடி இவையெல்லாம் இடிக்கப்படும் என்றார். அவர்கள் இயேசுவிடம் போதகரே, நீர் கூறியவை எப்போது நிகழும். இவை நிகழப் போகும் காலத்திற்கான அறிகுறி என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர் நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பலர் என் பெயரை வைத்துக் கொண்டு வந்து நானே அவர் என்றும் காலம் நெருங்கி வந்துவிட்டது என்றும் கூறுவார்கள். அவர்கள் பின்னே போகாதீர்கள். .....*

**ஒளியில் விழிப்புறுதல்**

ஆவியானவரே! அன்பின் நண்பரானவரே என் இயேசுவின் உள்ளத்தின் எண்ணத்தினை இந்நற்செய்தியில் நான் அறிந்துகொள்ள எனக்கு தேவையான தெளிவினைத் தந்தருளும். ஜெருசலேம் கோவிலின் புற அழகைப் பார்த்து வர்ணித்துக் கொண்டிருந்த மனிதர்களைப் பார்த்து எதிர் காலத்தில் நடக்கப்போகும் அழிவினைப் பற்றி இயேசு எச்சரிக்கிறார். அதே வேளை அறி குறியினைக் கேட்கும் மக்களுக்கும் அக்காலத்திற்கான அறிகுறிகளை எடுத்துக் கூறுகிறார். மேலும் ஏமாற வேண்டாம், திகிலுற வேண்டாம், என்றும் கூறி திடப்படுத்தி விழிப்புற வைக்கிறார். இவையெல்லாவற்றையும் மக்கள் மீது கொண்ட அளவற்ற அன்பின் காரணமாகவே கூறுகிறார். அவரது ஒவ்வொரு வார்த்தைகளும் உலக முடிவு வரைக்கும் பொருத்தமான உயிருள்ள வார்த்தைகளாகவே அமைந்துள்ளன.

**எமது பக்கம்**

இன்றைய கால கட்டத்தில் நாம் காணுகின்ற நிகழ்வுகள் கூட இறை இயேசு அன்று கூறிய அறிகுறிகளும் அடையாளங்களாகவும் இருக்கின்றன. பஞ்சம், பட்டினி, கொள்ளை நோய்கள் மருந்தே கண்டு பிடிக்கமுடியாத புதுப் புது நோய்கள், நில நடுக்கங்கள், வெள்ளப்பெருக்குகள் நாட்டுக்கு நாடு எதிர்ப்புகள் போன்ற பலவிதமான சம்பவங்கள் இறை இயேசுவின் நாவினின்று புறப்பட்ட வார்த்தைகள் வாழுகின்றன. *விண்ணும் மண்ணும் அழிந்துபோம். ஆயினும் என் நாவினின்று வந்த வார்த்தைகள் ஒருபோதும் அழியா* என்ற அவருடைய வார்த்தைகளை உயிருள்ள வார்த்தைகளை வாழுகின்ற ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்காமல் போகான். எனவே எமது வாழ்வில் இறைவார்த்தைக்கு முதலிடம்கொடுத்து அதன் அர்த்தத்தை உணர்ந்து அதன்படி வாழ முயலுவோம். எது நடந்தாலும் திகிலுறாமல், போலிகளுக்கு ஏமாறாமல் இறைவிசுவாசத்தில் நிலைத்து உறுதியுடன் வாழ்வோம்.

**செபம்**

அன்புத் தந்தாய்! உமது அன்பு மகன் மூலம் நீர் தந்த வார்த்தைகளுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். விலை மதிக்கப் பெற முடியாத ஆன்மாவென்னும் ஆலயம், தீய சக்தியால் அழிக்கப் படாதிருக்க துணை புரிந்தருளும். இறை வார்த்தையூடாக வரும் உமது திருவுளத்தை நிறைவேற்ற வரமருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
24 புதன்

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
15 : 1-4

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
98 :1-3, 7 - 9

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
21 : 12-19

புனிதர்கள் மறை
பரப்பாளர்
ஆன்ருடுங்லாங்
தோழர்கள்

**பரிசுத்த நற்செய்தி**

இவை அனைத்தும் நடந்தேறும் முன் அவர்கள் உங்களைப் பிடித்துத் துன்புறுத்துவார்கள். தொழுகைக் கூடங்களுக்குக் கொண்டு செல்வார்கள்! சிறையில் அடைப்பார்கள்: என் பெயரின் பொருட்டு அரசர்களிடம், ஆளுநர்களிடமும் இழுத்துச் செல்வார்கள்.... உங்கள் எதிரி எவராலும் உங்களை எதிர்த்து நிற்கவும், எதிர்த்து பேசவும் முடியாது. ஆனால் உங்கள் பெற்றோரும், சகோதர சகோதரிகளும், உறவினர்கள், நண்பர்களும் உங்களைக் காட்டிக் கொடுப்பார்கள். உங்களில் சிலரைக் கொள்வார்கள். என்பெயரின் பொருட்டு எல்லோரும் உங்களை வெறுப்பார்கள். இருப்பினும் உங்கள் முடி ஒன்று கூட விழவே விழாது. நீங்கள் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்.

**ஒளியின் விழிப்புறுதல்**

முழு அகிலத்துக்குள்ளும் அசைவாடும் தூய ஆவியானவரே! இறை மகனின் உள்ளத்தினை, செயல்களை, பெலவீனமான எனக்கு வெளிப்படுத்தியருளும். வரப்போகும் கேட்டினைப்பற்றி வெளிப்படுத்தும் இயேசு அதன் பிரதிபலன் எவ்வாறு இருக்கும் என்பதனை படம் பிடித்துக் காட்டுகின்றார். என் பொருட்டு நீங்கள் பலவிதமான வேதனை, துன்ப துயரங்களுக்குள் சிக்குவீர்கள் என்பதனை தெளிவுபடுத்திக் கூறுகின்றார். நீங்கள் படும் வேதனை, அவமானங்கள் எல்லாம் உங்கள் கடவுளாகிய எனக்கு சான்றாகும் என்கின்றார். எனவே நீங்கள் எந்த இடத்தில் என்ன பேசுவது என்று கவலைப்படவேண்டாம். நீங்கள் எந்தப்பெரியவர் முன்னிலையில் பேசினாலும், நீங்கள் எப்படி பேச வேண்டும், எப்படி பதில் கொடுக்க வேண்டும் என்பதற்கு நான் உங்களுக்கு ஞானத்தின் கொடையைத் தருவேன் என்று வாக்குறுதி கொடுக்கின்றார். நான் உங்களோடு இருக்கும் போது நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். ஒருவராலும் உங்களை எதிர்த்து நிற்க முடியாது. முழு உலகமே உங்களைக் காட்டிக் கொடுத்தாலும், வெறுத்துத் தள்ளினாலும் உங்களைப் பற்றிய திட்டம் உங்கள் தேவனாகிய ஆண்டவரிடம் உள்ளது. நீங்கள் மன உறுதியோடு இருங்கள் என்று தம் சீடர்களுக்கு வழிகாட்டுகின்றார்

**எம்பேரில்**

ஆண்டவரின் அரசைக் கட்டியெழுப்புவதில் மிக, மிக ஆர்வம் கொண்டு செயல்படும் எனக்கும் உங்களுக்கும் வரும் கசப்பான அனுபவங்கள் என்ன? இந்தக் கசப்பான அனுபவங்கள் நிமித்தம் நாம் உடைந்து போய் விடுகின்றோமா? எம் ஆண்டவருக்காக எமக்கு வருகின்ற எல்லா வேதனைகளையும் தாங்கிக் கொண்டு இறை அரசை கட்டி எழுப்புவோம்.

**செபம்**

எம்மை உண்டாக்கி, உருவாக்கிய ஆண்டவரே! உலகம், சரீரம், பசாசு போன்ற சத்துராதிகளோடு போராடி, உமது இறையரசை கட்டி எழுப்புவதற்கு எமக்கு வரம் தாரும்.

*ஏனெனில் அவர் உலகுக்கு நீதி*
*வழங்க வருகின்றார்.*
*பூவுலகை நீதியுடன் ஆண்டிடுவார்.*
*மக்கள் இனங்களை*
*நேர்மையுடன் ஆட்சி செய்வார்*
*இஸ்ராயேல் வீட்டாருக்கு*
*வாக்களிக்கப்பட்ட தமது பேரன்பையும்*
*உறுதிமொழியையும் அவர் நினைவு*
*கூர்ந்தார். உலகெங்குமுள*
*அனைவரும் நம் கடவுள் அருளிய*
*விடுதலையைக் கண்டனர்.*
*(தி.பா. 98:3,9)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
25 வியாழன்

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
18 : 1-2,21-23
19:1-3,9

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
100 :1-5

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
21 : 20 - 28

அலெக்சந்திரியா
நகர்
புனித கத்தரின்
நினைவு

**பரி.நற்செய்தியிலிருந்து**

எருசலேமைப் படைகள் சூழ்ந்திருப்பதை நீங்கள் காணும் போது அதன் அழிவு நெருங்கி விட்டது என அறிந்து கொள்ளுங்கள். அப்போது யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்குத் தப்பி ஓடட்டும்..... ஏனெனில் அவை பழி வாங்கும் நாள்கள். அப்போது மறைநூலில் எழுதியுள்ள யாவும் நிறைவேறும்..... உலகுக்கு என்ன நேருமோ என எண்ணி மனிதர் அச்சத்தினால் மயக்கமுறுவர்.... அப்போது மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மானிட மகன் மேகங்கள் மீது வருவதை அவர்கள் காண்பார்கள். இவை நிகழத் தொடங்கும் போது நீங்கள் தலை நிமிர்ந்து நில்லுங்கள். ஏனெனில் உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது.

**ஒளியின் விழிப்புறுதல்**

தூய ஆவியானவரே, என் ஆன்மாவின் அன்பு நண்பரே, இயேசு ஆண்டவரின் உள்ளரங்க அனுபவத்தினைக் காண எம்மை வழிநடத்தும்.

உலக ஆரம்பத்திலேயே ஆண்டவரின் ஒலிக்கு கீழ்ப்படியாமையினால் அழிவைத் தேடிச் சென்ற மக்களை இறை அப்பா தமது பரிசுத்த அன்பினால் அன்பு செய்து, அவரின் இறை அரசின் இல்லத்திற்கு முழு மனித சமுதாயத்தையும் அழைத்து வரவே தந்தை இவ்வுலகிற்கு தம்மை அனுப்பினார் என்பதைக் இயேசு நாதர் காண்கின்றார். ஆனால் பணம், பதவி, பட்ட உலக ஆசைகளுக்கு அடிமையாகி அப்பா தந்தையை அறியாதவர்களாகவும், அவரின் போதனைகளையும் நற்செய்தியினையும் ஏற்காதவர்களாக வாழ்ந்து அழிவைத் தேடிச் செல்லும் மக்களைக் கண்டு மகனானவர் வேதனைப்படுகின்றார். அவர்கள் முகம் கொடுக்கப் போகும் அழிவுகளை முன்கூட்டியே மக்களுக்கு எடுத்துக் காட்டத் தாகம் கொண்டார். அவரின் இரண்டாவது வருகை வரும் போது, அதற்கு முகங் கொடுப்பதற்குத் தேவையான வல்லமையைப் பெற ஒவ்வொரு வரும் இருக்கும் இடத்திலிருந்து இருக்க வேண்டிய இடத்திற்குச் செல்லுவதற்கு அழைப்பு விடுக்கின்றார்.

**எமது பேரில்**

இறை அரசிற்காக தேர்ந்து எடுக்கப்பட்ட நாம் ஆண்டவரை அறியாதவர்களாகவும் இயேசுவின் போதனைகளையும் நற்செய்திகளையும் ஏற்காதவர்களாகவா வாழ்கின்றோம்? அவரது இரண்டாவது வருகையின் போது வல்லமையுடனும் மாட்சிமையுடனும் மேகங்களில் இருந்து இறங்கி வரும் அவரை முகமுகமாய் தரிசிக்கும் புனிதத் தன்மை பெற ஆயத்தமாக எமது பாவங்களுக்கும் பெலவீனங்களுக்கும் விழிப்புற்று, இறைமகனின் திருவருகையை காண்பதற்கு மனந்திருந்தி, மனம் மாறி வாழ, எம்மை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளிப்போம்.

**செபம்.**

*அன்பின் ஆண்டவரே உமது ஆளுமைக்கு உட்பட்டவர்களாகவும் உமது திருவிருப்பத்தினை நிறைவேற்றும் மக்களாக வாழ்ந்து உமது திருக்குமாரனின் இரண்டாவது வருகையை எதிர்பார்த்த வண்ணம் வாழ உமது பரிசுத்த ஆவியினால் எம்மை வழிநடத்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
26 வெள்ளி

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
20 : 1-4,11-21 :2

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
84:3-6,8

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
21: 29 - 33

## பரிசுத்த நற்செய்தி

இயேசு அவர்களுக்கு மேலும் ஓர் உவமை சொன்னார். அத்திமரத்தையும் வேறு எந்த மரத்தையும் பாருங்கள். அவை தளிர் விடும் போது அதைப் பார்க்கும் நீங்களே கோடை காலம் நெருங்கி விட்டது என அறிந்து கொள்கிறீர்கள். அவ்வாறே இவை நிகழ்வதைக் காணும் போது இறையாட்சி நெருங்கி வந்து விட்டது என்பதை நீங்களே அறிந்து கொள்ளுங்கள். அனைத்தும் நிகழும் வரை இத் தலைமுறை ஒழிந்து போகாது என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும். ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா.

## ஒழியில் விழிப்புறுதல்

விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும். ஆனால் என் வார்த்தைகளோ ஒழியவே மாட்டா என்று சொன்ன உன்னத ஆண்டவரே! இவ்வார்த்தைகளை நாம் விசுவசிக்கிறோம். அனுபவபூர்வமாக உணர்கிறேன். வாழ்வில் முகங்கொடுக்கின்ற ஒவ்வொரு நிகழ்வுகளின் போதும் உமது உயிருள்ள வார்த்தைகள் வாழ்கின்றன. 2004ம் ஆண்டில் நடந்த கடல் கொந்தளிப்பு வடக்கு, கிழக்கு போர் அந்நேரங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் வழியாக ஆண்டவரின் சினம் மேலோங்கிய விதம் என்பதை உணர்கிறோம். அதே வேளை, இறையாட்சியும் நெருங்கி வருகிறது என்பதையும் உணர்கிறோம். அவ்வேளையில் அழிந்து போகாத உமது வார்த்தையால் எம்மைத் திடப்படுத்தியமைக்காகவும் நன்றி கூறுகின்றோம்.

## எமது பக்கம்

அழைக்கப்பட்ட மக்களாகிய நாம் அறிகுறிகளைக் காணும் போது, ஆண்டவரின் அழியாத வார்த்தைகளுக்கு விழிப்புறுகின்றோமா? அல்லது அறியாத மக்களைப் போன்று நிலையற்ற செல்வங்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, நிலையான ஆண்டவரின் வார்த்தைகளை உதாசீனப்படுத்துகின்றோமா? அன்பின் ஆண்டவரின் விருப்பத்தைத் தவிர வேறெதுவும் எனக்கு இல்லை என்ற வார்த்தையை ஏற்றுக்கொண்டு இறைவிருப்பத்தைத் தேடி அதன்படி வாழ்வது தான் இறையாட்சிக்கு உட்படக் கூடிய மார்க்கம் என்பதை உணர வரமருளும்.

## அனுபவமொன்று

எனது வீடு சிறியதாக இருந்ததால் முன்கூடத்தை சிறிது பெரிதாக்க வேண்டும் என்ற ஆவலில் முன் கூடத்தை உடைத்தோம். ஆனால் 1½,2 வருடங்கள் அண்மித்தும் வீடு முற்றுப்பெறாத நிலை என் கணவருக்கு பிள்ளைகளுக்கு ஒரே கவலை. ஆனால் எனக்கோ 'கவலைப்படுவதால் ஒரு முழம் உன்னால் கூட்ட முடியுமா' என்ற இயேசுநாதரின் வார்த்தையே அடிக்கடி நினைவிற்கு வரும். அவ்வேளையிலெல்லாம் நான் இறைவா, உமது விருப்பம் எப்படியோ அதன்படி நடக்கட்டும். உமது நேரம் வரும்வரைக்கும் பொறுமையோடு காத்திருக்க எங்களுக்கு தேவையான மனநிலையை தாரும். 'உமது விருப்பத்தைத் தவிர வேறெதுவும் எனக்கு இல்லை' என்ற தலைப்பிற்கு கீழ்ப்படிதலோடு இடமளித்து வாழ வரமருளும் என்று மன்றாடுவேன். இப்பொழுது வேலைகள் முற்றுப்பெறும் தருவாயில் இருக்கிறது. இறைவா உமக்கே நன்றி

## செபம்

அப்பா தந்தையே! உமது சினத்திற்கு ஆளாகாமல் உமது வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழக் கூடிய தாழ்மையான, தெளிவான மனத்தினை உமது தூய ஆவியின் மூலம் தந்து எம்மை வழிநடத்தியருளும் ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
27 சனி

முதலாம்வெளிப்பாடு
திருவெளிப்பாடு
22:1-7

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
95:1-7

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
21:34-36

**பரிசுத்த நற்செய்தி**

***விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும். ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா. மேலும் இயேசு உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டம் இவ்வுலக வார்த்தைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறு அந்நாள் திடீரென வந்து ஒரு கண்ணியைப் போல் உங்களைச் சிக்க வைகாதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள். மண்ணுலகு எங்கும் குடியிருக்கும் எல்லார் மீதும் அந்நாள் வந்தே தீரும். ஆகையால் நிகழப் போகும் அனைத்திலிருந்தும் தப்புவதற்கும் மானிடமகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள் என்றார்.***

**ஒளியில் விழிப்புறுதல்**

நாம் பெலயீனப்படுகின்ற வேளையில் எம்மை விழிப்புற வைத்து பாதுகாக்கின்ற பரி. ஆவியானவரே, இந்நற்செய்தியின் உள்ளாழத்தை புரிந்து எழுதுவதற்கு என்னை முழுமையாக நிரப்பியருளும்.

இந்த உலகம் அழிந்தாலும் இறைவார்த்தை அழியாமல் நாம் மீட்படைவதற்கு வழிகாட்டுகின்றது. உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும், இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறு பார்த்துக் கொள்ள கூறுகின்ற இயேசு கிறிஸ்துவானவர், புனிதமிகு நாளுக்கு முகங் கொடுக்க விழிப்போடு வாழவும் எச்சரிக்கையாய் இருங்கவும் கூறுகின்றார். இவ்வளவு தெட்டத் தெளிவான உயிருள்ள வார்த்தைகள் எமக்கு கிடைக்கின்ற வேளையில், நாம் என்ன நிலையில் இருக்கின்றோம் என்று சிந்திப்போம். இறைமகனாகவரின் வருகையை முன்னிட்டு நான் யார் என்பதனை உணர்ந்து மீட்படைவதற்கான தாகம் என்னுள் இருக்கின்றதா? ஆழ்ந்து சிந்திப்போம். அவர் முன்னிலையில் நிற்பதற்கு தகுதியுள்ள மகனாக மகளாக ஆவல் கொள்வோம்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் வரவிருக்கின்ற (மார்கழி) கிறிஸ்து பிறப்பினை கொண்டாட ஆயத்தமாவோம். அதை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட சிந்திக்க வேண்டும். எம் ஒவ்வொருவரின் வீட்டுச் சூழலை உணர்ந்து செயல்பட வேண்டும். உடலை அலங்கரிப்பதற்கானவைகளுக்கும், குடிவெறி, களியாட்டங்களுக்கும் ஆளாகாமல் நம்மிடம் உள்ளதைக் கொண்ட எளிமையான முறையில் கொண்டாடுவதற்கு ஆயத்தமாவோம். எளிமையே உருவானவர் தான் எம் ஆண்டவர் இயேசு-கிறிஸ்துவானவர். இறைவார்த்தைகளுக்கு செவிமடுத்து (1 தெசலோ 5: 16,17)ல் "எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள். இடைவிடாது செபியுங்கள். எல்லாவற்றிற்கும் நன்றி கூறுங்கள்." ஆகவே கிறிஸ்து வழியாய் கடவுள் ஏற்படுத்திய திருவுளத்தினை உணர்ந்து , உலகைச் சார்ந்த நிலையிலிருந்து மீண்டும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து செபியுங்கள். அவர் வருகின்ற காலம் நெருங்கி விட்டது. அவர் வருகின்ற வேளையில் ஒவ்வொருவரும் தூய்மையானவர்களாக மாற வேண்டும். அப்போது தான் அவர் முன்னிலையில் நிற்க முடியும். எவ்வேளையிலும், எல்லோருக்காகவும் செபியுங்கள். அப்பொழுது கண்ணியில் சிக்க வைக்காது எம் ஒவ்வொருவரையும் தம் சிறகுகளில் அரவணைத்துக் கொள்வார்.

**செபம்**

அப்பா பிதாவே, பெலயீனப்பட்ட என் உள்ளத்தை முழுமையாக பரி. ஆவியினால் நிரப்பும். நான் வீழ்ந்து விடுகிறேன். என்மீது மனம் இரங்கும். நீர் எனக்காகச் சிந்திய விலைமதிப்பில்லாத திரு இரத்தத்தால் என்னை கழுவியருளும். ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
28 ஞாயிறு

முதலாம்வெளிப்பாடு
எசாயா
2 : 1-5

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
122:1-9

இரண்டாம்வெளிப்பாடு
ரோமர்
13: 11-14

நற்செய்திவெளிப்பாடு
புனித மத்தேயு
24: 37 -44

திருவருகையின்
முதலாவது
ஞாயிறு

திருச்சபைத் தாயானவர் தமது திருவழிபாட்டு வருடத்தின் முதலாவது ஞாயிறு தினத்தையும், திருவருகைக் காலத்தின் முதலாவது ஞாயிறு தினத்தையும் ஒரே நாளில் கொண்டாடுகின்றாள். இயேசு கிறிஸ்து நாதருடைய இரண்டாவது வருகையை முன்னிட்டு நாம் எப்போதுமே ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதைக் காண்பித்துத் தந்தவாறு அதற்கு ஆயத்தமாகின்ற காலமாக திருவருகைக் காலத்தையும் ஒதுக்கித் தந்துள்ளது. மனிதனது வாழ்வு இவ்வுலகிற்கு மாத்திரம் வரையறைக்கப்பட்ட தொன்றல்ல. கத்தோலிக்கராகிய நாம் இவ்வுலகில் வாழ்ந்தாலும், இவ்வுலகைச் சாராதவர்கள் என்பதை எப்போதும் நினைவிற் கொள்வது நலமானதாகும். இது மனஸ்தாபத்தின் காலமாகும். இக்கால வரையறையை இயேசுவின் பிறப்பிற்கு ஆயத்தமாகின்ற காலமாக்கிக் கொள்வதோடு இதயத்தால் அவரது இரண்டாவது வருகைக்கு ஆயத்தமாகின்ற காலமாக்கிக் கொள்வது மேலானதாகும்.

### முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

**....இறுதி நாள்களில் ஆண்டவரின் கோவில் அமைந்துள்ள மலை எல்லா மலைகளுக்-குள்ளும் உயர்ந்ததாய் நிலை நிறுத்தப்படும். ஏனெனில் சீயோனிலிருந்தே திருச்சட்டம் வெளிவரும். எருசலேமிலிருந்தே ஆண்டவரின் திருவாக்குப் புறப்படும்... அவர் வேற்றினத்-தாரிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்து வைப்பார்... அவர் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரி வாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்.... அவர்கள் இனி ஒருபோதும் போர்ப் பயிற்சி பெறமாட்டார்கள். யாக்கோபின் குடும்பத்தாரே, வாருங்கள் நாம் ஆண்டவரின் ஒளியில் நடப்போம்.**

### ஒளியில் விழிப்புறுதல்

இறைவாக்கினரான எசாயா சதாகால சமாதானம் உதயமாகின்ற காலத்தைப் பற்றிய இறைவாக்கினை உரைப்பது அசிரியாவின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த காலப்பகுதியிலேயாகும். ஆண்டவரின் கோவில் அமைந்துள்ள எருசலேமிலிருந்தே சமாதானத்தின் திருவாக்குப் புறப்படும் என்றும் கூறுகின்றார். நிரந்தரமான சமாதானம் வரும்போது மனிதருள் ஏற்படுகின்ற உறுதிப்பாட்டினைப் பற்றியும் அவர் கூறாமல் கூறுகின்றார்... அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரி வாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்.... ...யுத்தம் மீண்டும் நடவாதிருந்தால் மாத்திரமே அவ்வாறு நிகழும். மக்களுள் உறுதிப்பாடு, நிலைப்பாடு ஏற்பட்டால் மாத்திரமே அவ்வாறு நிகழும். அல்லாது போனால்... கப்பல் கப்பல்களாக ஆயுதங்கள் வந்து குவியும்... இளவயதினர் ஆயுதம் ஏந்துவர்....

இறைவனுடைய சமாதானம் நிரந்தரமானதாகும்... நம்பிக்கைக் குறியதாகும். தர்மத்தில் வாழ்ந்து உள்ளரங்க அமைதியை சமாதானத்தை அனுபவிக்கும்போது மாத்திரமே உண்மையான சமாதானம் உருவாகும். அத்தகைய சமாதானத்தைப் பற்றி அல்லவா இறைவாக்கினர் கூறுகின்றார்???

### இரண்டாவதுவெளிப்பாட்டிலிருந்து

***இறுதிக் காலம் இதுவே என அறிந்து கொள்ளுங்கள். உறக்கத்தி-னின்று விழித்தெழும் நேரம் ஏற்கனவே வந்துவிட்டது. நாம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை கொண்ட போது இருந்ததைவிட மீட்பு இப்பொழுது மிக அண்மையில் உள்ளது. இரவு முடியப்போகிறது. பகல் நெருங்கி உள்ளது. ஆகவே, இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து விட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக! பகலில் நடப்பதுபோல மதிப்போடு நடந்து கொள்வோமாக!.. தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம்கொடுக்க வேண்டாம். இயேசுக் கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்.*

**பரி. நற்செய்தியிலிருந்து**

அந்த நாளையும், வேளையையும் பற்றித் தந்தை ஒருவருககுத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. விண்ணகத் தூதருக்கோ மகனுக்கோ கூடத் தெரியாது. நோவாவின் காலத்தில் இருந்தது போலவே, மானிட மகன் வரும் போதும் இருக்கும்... நோவா பேழைக்குள் சென்ற நாள் வரை, எல்லாரும் திருமணம் செய்து கொண்டும், உண்டும் குடித்தும் வந்தார்கள். வெள்ளப் பெருக்கு வந்து அனைவரையும் அடித்துச் செல்லும் வரை அவர்கள் எதையும் அறியாதிருந்தார்கள்.

அப்படியே மானிட மகன் வருகை-யின போதும் இருக்கும்... விழிப்பாயிருங்கள், ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது..... எனவே, நீங்கள் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்.

**ஒளியின் விழிப்புறுதல்**

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் எமது வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள் என்ன? இலக்கு என்ன? நாம் ஏன் வாழுகின்றோம்? என்ற கேள்விகளை எம்மிடமே கேட்க வேண்டும். கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டும் சார்ந்திருந்தால் எல்லா மக்களையும் விட இரங்குதற்கு உரியவராய் இருப்போம்? (1கொரிந் 15:19)

நாம் இரங்குதற்கு உரியவராய் இராதிருப்பதற்காக வேண்டி, எதைச் செய்த போதிலும் பேரின்ப வீட்டினை எதிர்பார்த்தவாறே செய்வோம். இவ்வுலக வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற துன்ப துயரங்கள் என்பனவற்றை எமக்குக் கிடைக்கவுள்ள பேரின்ப வாழ்வோடு ஒப்பிடவே முடியாது. ஆனபடியால், கிறிஸ்துவிடமிருந்து எம்மை எதுதான் பிரித்துவிட முடியும்?

விழிப்புடனும் ஆயத்தமாகவும் இருப்பதற்காக வேண்டியே. நாம் அறிவுறுத்தப்படுகின்றோம். இறைமகன் வருகின்ற கால நேரமானது கணிக்க இயலாது. எப்போது வேண்டுமானாலும் வரலாம். இரவிலும் வரலாம், பகலிலும் வரலாம். இறைமகன் வருகின்ற வழியும் தெரியாது. போகிற வழியும் தெரியாது. இறைமகன் வருகின்ற உருவமும் தெரியாது, ஆகவே விழிப்பாயிருங்கள் என்று இயேசு கூறுகின்றார். நாம் விழிப்பாய் இருக்கும் போது எம்மில் மட்டுமன்றி பிறரிலும் இயற்கையிலும் இறைமகனை, இறைமையைக் காணலாம்.

தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடாது இயேசுக் கிறிஸ்துவை அணிந்து கொள்வோம்.

அன்றாட நிகழ்வுகளின் வழியாகவும், சக மனிதர்கள் வழியாகவும் இறைவனுடைய படைப்புக்கள் வழியாகவும் நம்மைச் சந்திக்கின்ற இறைவனைக் கண்டு கொள்வோம்.

**செபம்.**

**இறை தகப்பனே, உமது திருமகனின் இரண்டாவது வருகையை எதிர பார்த்தவாறு மனம் வருந்துதலின் வாழ்வு வாழ எம்மை உமது ஆவியினால் நிரப்பியருளும்.**

**செயற்பாடு**

**ஒளியானவருள் வாழ இருளானவனைக் கைவிடுவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
29 திங்கள்

முதலாம்வெளிப்பாடு
எசாயா
4:2-6

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
122:1-4, 8-9

நற்செய்திவெளிப்பாடு
புனித மத்தேயு
8:5-11

## பரிசுத்த நற்செய்தி

இயேசு கப்பர் நாகுமுக்குச் சென்ற போது நூற்றுவர் தலைவர் ஒருவர் அவரிடம் உதவி வேண்டி வந்தார். ஐயா என் பையன் முடக்குவாதத் தால் மிகுந்த வேதனையுடன் படுத்துக் கிடக்கிறான் என்றார். இயேசு அவரிடம் "நான் வந்து அவனைக் குணமாக் குவேன்" என்றார். நூற்றுவர் தலைவர் மறு மொழியாக ஐயா நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதி யற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்-லும் என் பையன் நலமடை வான். நான் அதிகா-ரத்துக்கு உட்பட்டவர் என் அதிகாரத்திற்கு உட்பட்ட படைவீரரும் உள்ளனர்....... இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை. கிழக்கி லும் மேற்கிலுமிருந்து பலர் வந்து ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசின் பகுதியில் அமர்வர்

## ஒளியில் விழிப்புறுதல்

இன்றைய நற்செய்தியில் கிறிஸ்துவின் மகிழ்வும், வேதனையுமான உணர்வுகள் வெளிப்படுகின்றன. நூற்றுவத் தலைவன் கிறிஸ்துவின் வார்த்தையில் கொண்ட விசுவாசத்தை எண்ணி மகிழும் வேளை **"இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை கண்டதில்லை"** என்பதன் மூலம் அவரது வேதனை வெளிப்படுகின்றது. இறை தந்தை அன்பானவர். எம்மை பராமரிப்பவர் என்பதனால் கிறிஸ்து சொல்லிலும் செயலிலும் காட்டி வெளிப்படுத்தினார். இன்று எம்மிடம் கேட்பது இதுவே. இறை அன்பை விசுவசிக்கின்றாயா? சந்தேகிக்கின்றாயா? எம்மை நாமே கேள்வி கேட்போம். எனது பதில் என்ன?

**எம்பேரில்**

தொடர்ந்து பிரச்சனைகள் வரும் போது எமது மனதில் சலிப்பேற்படும். காரணம் பிரச்சனைகளும் கஷ்டங்-களும் மட்டுமே எம் கண்களுக்கு தெரிவது. கிறிஸ்துவை நோக்கி பார்க்கும்போது அவர் எமக்காக செய்த நன்மைத்தனங்கள் எமக்கு புலனாகும். மனதில் அமைதி உருவாகும். சென்ற மாதம் எனது பல எதிர்பார்ப்புக்கள் சிதைவுற்று அனைத்தும் தோல்வியின் அனுப-வமாக இருந்தது. மரத்தில் விழுந்-தவனை மாடு ஏறி மிதித்தது போல எனது கணவர் வேலை செய்யும்-போது 30 - 36 அடி உயரத்திலி-ருந்து விழுந்து விபத்துக்குள்ளா-கினார். இதனால் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். என் மனதில் இருள் ஆதிக்கம் செய்ய தொடங்கியிருப்பதற்கு விழிப்புற்றேன். தூய ஆவியே! என் மனதை எந்த இருளும் ஆட்கொள்ளாத வண்ணம் உமது ஒளியால் என்னை மூடிக்கொள்ளும் என்று செபித்தேன். அவ்வேளை மகளே உன் கணவனின் இரு கால்களுக்கு கட்டுப்போட்டாலும் இன்னும் ஓரிரு மாதங்களில் நடந்துவிடுவார். உன் கணவனை உயிரை நானே கரத்தில் ஏந்தினேன் என்று குரலொலி கேட்டது. கண்ணீருடன் நன்றி சொன்னேன். சங்கத்தினுள்ளோர் மற்றும் நல் உள்ளம் கொண்ட உறவினர்களும் ஆறுதலான வார்த்தைகள் செப உதவியுடன் பொருளுதவியும் செய்து எனது இக்கட்டுக்கு உதவினார்கள். உலகத்தில் தொல்லைகள் உண்டு. திடன் கொள்ளுங்கள் நான் உங்-களை கைவிட மாட்டேன் என்ற ஜீவ வார்த்தைகள் என்னை வாழ்-விக்கின்றன. உங்கள் வேதனைகள் பிரச்சினைகளில் போது கிறிஸ்துவை நோக்கி வாருங்கள். அவரது வாக்குறுதிகளை பற்றிக் கொள்-ளுங்கள். உங்களுக்கு புதுதெம்பு ஏற்படும்.

**செபம்**

அன்பின் தேவனே! என் வாழ்வில் எந்நிலை ஏற்பட்டாலும் நான் உம்மை விசுவசித்து வாழ உமது ஜீவனுள்ள ஆவியை தந்து வழிநடத்தும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
கார்த்திகை
30 செவ்வாய்

முதலாம்வெளிப்பாடு
ரோமர்
10 : 9 - 18

பதிலுரைப்பாடல்
திருப்பாடல்
19 : 8-11

நற்செய்திவெளிப்பாடு
புனித மத்தேயு
4 : 18 - 22.

### பரிசுத்த நற்செய்தி

இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடக்கும் போது சகோதரர் இரு-வரைக் கண்டார். ஒருவர் பேதுரு எனப்படும் சீமோன் மற்றவர் அவர் சகோ - தரரான அந்திரேயா. மீனவரான அவ்விருவரும் கடலில் வலை வீசிக் கொண்டிருந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் என்றார்..... அவர்கள் தங்கள் படகையும் தந்தை-யையும் விட்டு விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

### ஒளியில் விழிப்புறுதல்

கடலோரத்தில் எத்தனையோ மக்கள் இருந்திருப்பார்கள். ஆனால் குறிப்பிட்டோரை அழைக்கின்றார். கிறிஸ்துவின் குரலுக்கு அவர்கள் செவி சாய்ப்பார்கள் என்று அறிந்திருப்பாரோ? *என் பின்னே வாருங்கள்* என்று அழைத்தவுடன் அவர்கள் வாழ்வுக்கு ஆதரமான படகு, வலைகள் தந்தையையும் விட்டு கிறிஸ்துவை பின் தொடர்கின்றனர். கிறிஸ்துவின் வார்த்தையில் உள்ள வல்லமையும் இங்கு வெளியாகின்றன. தந்தையின் இறையரசை உலகில் உருவாக்க கருவிகளாக அவர்-களை தெரிவு செய்தார். அப்பணியே இன்றும் தாய் திருச்சபையில் தொடருகின்றது. எம்மையும் கிறிஸ்து ***"என் பின்னே வா"*** என அழைக்கிறார். இவ்வொலி எமக்கு கேட்கின்றதா? தூய ஆவியில் நிரம்பினால் மட்டுமே இவ்வொலியை எம்மால் கேட்கமுடியும். உலக சத்தத்துக்குள் அகப்பட்டு இருந்தால் எமக்கு இவ்வொலி கேட்காது. தூய ஆவியில் நிரம்பி, கிறிஸ்துவின் அழைப்புக்கு விழிப்புறுவோம்.

### எம் பேரில்

அர்ப்பணத்தினூடாக கிறிஸ்து என்னை அழைத்ததை நான் உணர்கின்றேன். அவரோடு இணைந்து வாழும் போது என் வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாக இருக்கின்றது. அவரது அன்பு புதையலைப் போலவும் மறை இரகசியமுமாக இருக்கின்றது. நாள் தோறும் விதவிதமாக அவரது அன்பை வெளிப்படுத்துகின்றார். என் வாழ்வில் நான் முகம் கொடுக்கின்ற பிரச்-சனைகள் வேதனைகள், தோல்விகள். கஸ்டங்கள் அனைத்துக்கும் முகம் கொடுக்கும் விதமாக தூய ஆவியின் வல்லமையை தருகின்றார். கிறிஸ்து-வை இறைதந்தை "பிரியமான மகனே" என்று அழைத்து பாடுகளினூடாக வழிநடத்தினார். அதே போன்று, நானும் பல பாடுகளினூடாக வழி நடக்கும் போது இறை அப்பா என்னை -யும் எனது பிரியமான மகனே என அழைப்பதை உணர்கின்றேன். இத-னையே மேலான பாக்கியமாக எண்ணுகின்றேன். பானையில் இருந்-தால் தான் அகப்பையில் வரும் என்-பார்கள் நான் இறையன்பை அனுபவிக்காமல் என் குடும்பத்தில் இவ்வன்பை வெளிப்படுத்த முடியாது. என் குடும்பத்தினரும் பரிசுத்தமான இறையன்பை அனுபவித்து இறைவ-னுக்கு சாட்சியாக வாழுவதையிட்டு மகிழ்கின்றேன். சந்தோசத்தில் மகிழ்வது மனித இயல்பு. துன்பத்திலும் மகிழ்ச்சியாக வாழ்வது கிறிஸ்து பின்பற்றுவோரால் மட்டுமே முடியும். இவ்வாழ்க்கை முறையே கற்று தந்த இறைவனுக்கு கோடானக் கோடி நன்றி

### செபம்

என்னை அழைத்த தேவனே! என் வாழ்வில் உம் குரலுக்கு செவிசாய்த்து உமது விருப்பத்தை மட்டும் நிறைவேற்றி வாழ்ந்திட உமது தூய ஆவியின் வல்லமையைப் பொழிந்தருளும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர் : ..........................................................................................................

சஞ்சிகையை அனுப்ப வேண்டிய விலாசம் : ..........................................................

..........................................................................................................

................ஆம் ஆண்டு...................... மாதம் தொடக்கம் ஆறு/பன்னிரெண்டு மாதங்களுக்காக ரூபா...............................ஐ.......... இலக்கமுடைய காசுக்கட்டளையை /காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

திகதி :.................................                                   ..........................................

கையொப்பம்

---

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகை

- தபால் கட்டணத்துடன் : ஆறு மாதங்கள் - ரூ. 110.00
  பன்னிரெண்டு மாதங்கள் - ரூ. 220.00
- காசுக்கட்டளைகள்/காசோலைகள் : "கிது தன புபுதுவ" என்ற பெயருக்கு மாத்திரம் அனுப்பவும்.
- பணம் செலுத்தும் அலுவலகம் : வல்பொல (மே. மா.)
- புபுதுவ நடுநிலையம் : ஸ்ரீ பிரசங்காராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300 ப.்.க்ஸ் : 011-2231490
  மின்தபால் (E-mail) : pubuduwa@wow.lk
  Website : www.kithudanapubuduwa.net
  அச்சகம் : புபுது அச்சகம்,
  452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, தேவத்தை, ராகம.
  தொலைபேசி : 011-2958439
- பகிர்ந்தளித்தல் : "புபுதுவ" வெளியீடு - பரப்புதல் சேவை
  ஸ்ரீ பிரசங்காராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300
- சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :
  - ஸ்ரீ ரம்யா ராமய, பாலக்குடா, தலவில கோயில்.
  - ஸ்ரீ கிறிஸ்து தர்மாராமய, தெதுரு ஓயா, மானுவன்கம, சிலாபம்.
  - புபுது நிவச, தம்பறாவில, வைக்கால்.
  - புபுது நிவச, தங்கொட்டுவ.
  - புபுது நிவச, 386, பிரதான வீதி, நீர்கொழும்பு.
  - கிறிஸ்து கேந்திரய, ஜா-எல.
  - 7வது மாடி, 6வது சின்னப்பர் நடுநிலையம், கொழும்பு-11.

விலை
ரூ. 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்படக் கதை

இயேசு கிறிஸ்து நாதர் மரித்தோரில் நின்று உயிர்த்து எழுந்த பின் சீடர்களுக்கு தரிசனமாகிய மூன்றாவது நாளில் (புனித யோவான் 21:1-17) பேதுருவானவரிடம் **"நீ என்னை அன்பு செய்கின்றாயா?"** என்று கேட்ட கேள்வியை உங்களிடமும், என்னிடமும், எம் குடும்பத்தினரிடமும், சீடத்துவ சங்கத்தவர்களிடமும் கேட்கின்றார்.

அன்பினால் சுடர்விடும் அவரது இதயத்தை (**திரு இருதயம்**) நோக்கி இருக்கையில், தனிப்பட்ட வாழ்க்கையினுள், சங்கம வாழ்க்கையினுள், சமுதாய சிக்கல்களுக்கு நடு நிலை வகிக்கையில், அவரைப் போன்று அன்பு செய்வதற்கும், பேதுருவானவரிடம் ஒப்படைக்கப்பட் மூவிதமான தூதுரைப் பணியை நிறை வேற்றுவதற்குத், தேவையான ஆவியானவரின் வல்லமையை வேண்டி நாம் செபிப்போம்.

தூய ஆவியில் பயணம் 2010 கார்த்திகை

ISSN 1391 - 5975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org